Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்து
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 09 திங்கட்கிழமை (25.08.2014) பக்கங்கள் 20 ஓசை – 328

## வறிய மாணவருக்கு அனுப்பிய 35 இலட்சம் ரூபா எங்கே?

### விந்தனிடம் கேட்டு துண்டுப்பிரசுரம்




(யாழ்ப்பாணம்)

வறிய மாணவர்களுக்கு என ஜேர்மன் மற்றும் பிரான்ஸ் நாடுகளில் பெற்றுக்கொண்ட 35 இலட்சம் ரூபா நிதி எங்கே என வ்டமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்திடம் கேள்வி எழுப்பியவாறு துண்டுப்பிரசுரம்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஏனைய கட்சிகளுடனும் பேச்சு நடாத்தும் இந்தியா

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிர்ந்த ஏனைய கட்சிகளையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளதாக இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று இந்திய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டது.

இலங்கையின் அரசியல் கட்சிகளை அழைத்து இனப்பிரச்சினை தீர்வு

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழிலிருந்து குருநாகலுக்கு மீனென கூறி கஞ்சா கடத்தல்

### இருவர் கைதாகினர்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து குருநாகலுக்கு மீன் கொண்டு செல்வதாகக் கூறி கேரள கஞ்சா போதைப்பொருள் கொண்டு சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் இருவரும் மாரவில பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து ஒரு கிலோ 200 கிராம் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சிலாபம் பகுதியைச் சேர்ந்த இருவரே கைது செய்யப்பட்டுள்ளவர்களாவர். அவர்களின் சிறிய ரக லொறி ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

# 13 ஆவது திருத்தச் சட்ட தீர்விற்கு தமிழ்க் கட்சிகள் தயாராக வேண்டும்

## அரசு தயார் என்கிறார் ஷேசாத்திரி ராமானுஜன்



(புதுடில்லி)

13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் இலங்கை இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு அந்நாட்டு அரசாங்கம் தயாராகவே உள்ளது. தமிழ்க் கட்சிகளும் அதற்கு தயாராக வேண்டுமென இந்திய வெளிவிவகாரத் துறை கொள்கைப் பிரிவின் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் சாரி ஷேசாத்திரி ராமானுஜன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் தீர்வு குறித்த பேச்சுக்களை முன்னெடுக்கும்படி இந்தியப் பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்புக்குப் பின்னர் இந்திய அரசாங்கம் தெரிவித்திருப்பது, ஆட்சி மாறினாலும் இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றமில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

இந்திய அரசு மாறிவிட்டது என்பதற்காக இலங்கை குறித்த வெளிவிவகார நிலைமை மாறும் என்று சொல்லமுடியாது. 13 ஆவது திருத்தம் என்பது இந்தியாவுக்கும் இலங்கைக்குமுள்ள ஒரு குத்துப்பாடு. இந்தத் திருத்தத்துக்குள் என்ன உள்ளதோ அவற்றைத்தான் பேசவேண்டும். தீர்வுகாணவேண்டும். இதற்கு கொழும்பு அரசு தயாராகவே இருக்கிறது. தமிழ்க் கட்சிகள் அதற்கு தயாராக வேண்டும். நாம் எப்போதும் கொழும்பு அரசுக்கு சொல்வது 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் தான் தீர்வு காணவேண்டும் என்று. இப்போது அந்த எண்ணத்தை மாற்றமுடியாது. மாறவும் கூடாது.

13 ஆவது திருத்தத்தில் ஒன்றுமில்லை என்ற எண்ணத்தை வைத்துக்கொண்டு பேச முடியாது. அதில் என்ன பிரச்சினையுள்ளது, என்ன திருத்தம் கொண்டுவரவேண்டும் என்பது குறித்து ஆராயவேண்டும். ஒருகையால் இலங்கை அரசு ஒன்றும் செய்யமுடியாது. அவர்களுக்கு காலம் தேவைப்படுகிறது. தமிழ் கட்சிகள் சொல்வது எல்லாம் சரி என்று இல்லை.

19 ஆம் பக்கம் பார்க்க

## அறிவிக்கப்படாத ஊடக தணிக்கை இல்லை என்கிறது அரசாங்கம்



(கொழும்பு)

இலங்கையில் ஊடகங்கள் அறிவிக்கப்படாத தணிக்கை எதற்கும் உட்படுத்தப்படவில்லை. சமூக ஊடகங்களுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முயல்கிறது என்ற கருத்து தவறானது என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## தமிழரசுக் கட்சியைப் பிரிக்க சதி செய்கிறது அரசாங்கம்

### குற்றஞ்சாட்டும் அரியம் எம்.பி.

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தமிழரசுக்கட்சியை பிரிக்க அரசாங்கம் வியூகம் அமைப்பதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிளவுகளை ஏற்படுத்த பலவாறாக முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அது முடியாது எனும் பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில்

19 ஆம் பக்கம் பார்க்க

## மோசமானவர்கள் பட்டியலில் ஜனாதிபதி மகிந்த

(கொழும்பு)

வரலாற்றுக் காலம் தொட்டு தற்போதைய காலம் வரையிலான காலகட்டத்தில் மிகவும் மோசமான மனிதர்களின் பட்டியலில் ரேங்கர் என்ற இணையத் தளம் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பான ஒரு கருத்துக் கணிப்பை அவ்விணையத் தளம் நட த்திவருவதுடன் அதில் பலரும் ஒன் லைன் மூலம் வாக்கெடுப்பில் கலந்து கொண்டு வாக்களித்து வருகின்றனர்.

இந்த மோசமான மனிதர்கள் பட் டியலில் ரஷ்யாவின் மறைந்த தலை வர் ஜோசப் ஸ்டாலின் முதலிடத் தைப் பிடித்துள்ளார்.

இரண்டாவது இடத்தில் ஜேர்மனியின் மறைந்த சர்வாதிகாரி

19 ஆம் பக்கம் பார்க்க



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தனின் வருடாந்த இரதோற்சவம் இலட்சக் கணக்கான பக்தர்கள் புடைசூழ நேற்றைய தினம் வெகுசிறப்பாக இடம்பெற்றது.

## அமெரிக்க ஊடகவியலாளருக்கு நிராகரிக்கப்படவில்லை விசா

### வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்க ஊடகவியலாளர் ஒருவருக்கு விசா வழங்கும் நடவடிக்கை தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவருக்கான விசா நிராகரிக்கப்படவில்லை எனவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

உரிய காலத்திற்கு விசாவிற்கு விண்ணப்பம் செய்யுமாறு குறித்த ஊடகவியலாளருக்கு அறிவித்தல்

19 ஆம் பக்கம் பார்க்க

# இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே கலைத்துறை விருத்திபெற வேண்டும்

## வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

கலைத்துறையில் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையேயுள்ள நீண்ட காலத் தொடர்புகள் இன்னமும் விருத்தி பெறவேண்டும் என்று வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவத்தை முன்னிட்டு நேற்று நீராவியடியில் உள்ள இலங்கை வேந்தன் நுண்கலைக் கல்லூரியில் இடம்பெற்ற 'தெய்வீக சுக அனுபவம்' என்ற நிகழ்வின் கீழ் இடம்பெற்ற பரத நாட்டிய ஆற்றுகை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், மென்மேலும் கலைத்துறைக்கு இந்திய அரசாங்கம் இவ்வாறான உதவிகளைப் புரிய முன்வரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்ட அவர், நல்லூர் முருகன் கோவில் உற்சவத்தை முன்னிட்டு வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சும், இந்தியத் தூதரகமும் கடந்த மூன்று ஆண்டுகளாக 'தெய்வீக சுக அனுபவம்' என்ற இந்த கலை நிகழ்வை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

இம்முறை தென்னிந்தியாவைச் சேர்ந்த லாவன்யா ஆனந்தின் பரதநாட்டிய பயிற்சிப்பட்டறை நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெறுவதாகவும் தெரிவித்தார்.

மேலும் இலங்கையில் இசை நடனத்துறை அனுபவங்கள் பல ஆண்டுகளாக வெளிப்படுத்தப்பட்டு வருவதுடன், இந்தத் துறையில் மேலும் வளர மாணவர்கள் இந்தியாவிற்குச் சென்று உயர் கல்வியைப் பெற்று அதன் மூலம் இவர்களது திறமைகள் வெளிக் கொண்டு வரப்படுவதாகவும், அந்த வகையில் இந்தியாவினுடைய இந்தப் பயிற்சிப் பட்டறை நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

இதற்காகப் பாடுபட்ட இந்திய துணைத்தூதரகத்துக்கும் எமது திணைக்கள அதிகாரிகளுக்கும் தமது நன்றியையும் அவர் தெரிவித்துக் கொண்டார். (பா)

# சந்நிதியானுக்கு இன்று கொடியேற்றம்



சேவல் கொடியோனே சந்நிதி வேலவா உன்
சேவடியை நாடி கொடியேற்றம் காண வருவோம்
அலை கடலோரத்திலே ஆனந்தம் உன்னிடத்தில்
அலை அலையாய் அடியார் கூட்டம் சேருதையா

வள்ளி தெய்வானையுடன் மயிலேறி வருபவனே
துள்ளி வந்ததேங்கள் சோகம் தீர்த்திட வேண்டுமையா
சாந்தி சமாதானம் சந்நிதியில் நாம் கேட்டிடவே முருகன்
சந்ததியையும் காக்க புன்னகையால் சொல்லிடுவான்

- பொலிகையூர் : கணேசமூர்த்தி விஜியந்தன்


## வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பெயர் : த. அக்சயன்

முகவரி : பத்தானை, அளவெட்டி வடக்கு

அகவை 7 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்


# நூல் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

'வன்னி வரலாறும் பண்பாடும்' நூல் அறிமுக நிகழ்வு இன்று காலை 10.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை மண்டபத்தில் முதுநிலை விரிவுரையாளர் க.அருந்தாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் வாழ்த்துரையாற்றவுள்ளார். அனுஜா இராசநாயகத்தின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் அறிமுகவுரையை நிகழ்த்தவுள்ளார்.

பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

650 பங்கங்களைக் கொண்ட 44 ஆய்வாளர்கள், பேராசிரியர்கள், அறிஞர்கள் இணைந்து எழுதிய இந்நூலின் தொகுப்பாசிரியரான க.சுந்தரலிங்கம் ஏற்புரையாற்றவுள்ளார். (105)

# குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தகராறு காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் யாழ்.நகரில் தூக்கிட்டு தற்கொலை புரிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விஜயரட்ணம் ஜெயானந்தம் (வயது-47) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்த நிலையில் சடலமாக நேற்று அதிகாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசாரணை சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனையின் பின்னர் சடலம் நேற்றுப் பிற்பகல் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

021 222 8680,
077 592 5088.

(C/3727)



# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2557 திகதி 23-08-2014

ஆங்கில எழுத்து: Q

வெற்றி எண்கள்: 06 35 42 65

போனஸ் இல: 12

ஜக்பொட் பரிசு ரூ.15,913,300/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 166916 | 20/- | 3.338,320/- |
| 2 இல | 11995 | 100/- | 1,199,500/- |
| 3 இல | 242 | 1,000/- | 242,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 6667 | 40/- | 266,680/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 450 | 1,000/- | 450,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 09 | 10,000/- | 90,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 15,913,300/- | - |
| 1 இல + போனஸ் இல | 7993 | 100/- | 799,300/- |
| 2 இல + போனஸ் இல | 358 | 500/- | 179,000/- |
| 3 இல + போனஸ் இல | 03 | 100,000/- | 300,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 298 | 200/- | 59,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 18 | 1,500/- | 27,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 194950 | | 7,951,400/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.08.27 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 16,368,775/-

வளமான வாழ்வித்து

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3761)




# மீன்சந்தை உட்கட்டுமான வேலைகள் விரைவில் நடாத்த ஏற்பாடு

## வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சங்கானை மீன்சந்தை உட்கட்டுமானம் விரைவில் இடம்பெறவுள்ளதாகவும் இதற்கான வரைபடங்கள், மதிப்பீடுகள் மற்றும் வேலைத்திட்டங்கள் உள்ளடக்கிய கேள்வி கோரல் அடுத்தவாரம் இடம்பெறவுள்ளதாகவும் வடமாகாண உள்ளூராட்சி திணைக்களம் துரிதமாக செயற்படுகின்றது என வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவர் சிவ-குரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) தெரிவித்துள்ளார்.

புறநெகும திட்டத்தின் ஊடான மீன்சந்தை உட்கட்டுமானம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சிவகுரு பாலகிருஸ்ணன் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்காலத்தில் சங்கானைப் பட்டினம் நகர சபையாக தரம் உயர்த்தப்படலாம் இதன் முன்னேற்பாடாகவே வசதிகளற்ற சந்தைக் கட்டத்தை தவிர்த்து சங்கானைபட்டின அபிவிருத்தி சபையினரால் வழங்கப்பட்ட இத்தியடி 5 பரப்பு காணியில் மூன்று கோடியே 20 இலட்சம் ரூபா செலவில் நவீன மீன்சந்தை அமைக்கப்படவுள்ளது.

மேற்படி சந்தை தொகுதிக் கட்டம் மற்றும் காணி தொடர்பான அனுமதிக்கு கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு காசோலை வைப்பிலிடுமாறு கோரப்பட்டுள்ளனர்.

இந்தியா கேரள உள்ளூர்சந்தை தொடர்பான கற்கை மற்றும் பயிற்சி முகாமின் ஊடாக கேரளா உள்ளூராட்சி முறைமை தொடர்பான அறிவினை பகிர்ந்து கொள்ளவும் உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாக நடவடிக்கைகளுக்குத் தேவையான வினைத்திறன் மிக்க செயற்பாட்டு திட்டங்கள் தொடர்பான பயிற்சிகளை வழங்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒவ்வொரு சபையும் தலைவர், உபதவிசாளர் உள்ளடக்கிய மூவர் விகிதம் செல்லத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இப்பயிற்சி மிகச்சிறந்த அனுபவம் என கொழும்பு சிலிக் (SLIG) நிறுவன சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள அரச அலுவலர்கள் 2005 இல் இந்த கேரளா விசேட பயிற்சிகளை பெற்றுள்ளனர். இவர்களுக்கு ஒரு மாதம் அரசாங்கச் செலவில் பயிற்சி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (92)



நல்லைக்கந்தன் உற்சவத்தை முன்னிட்டு இலங்கைக்கைத்தொழில் அபிவிருத்திச்சபை, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சும் இணைந்து யாழ்.மாநகரசபை வளாகத்தில் நடாத்திய கண்காட்சியில் கைத்தொழில் முயற்சியாளர்களின் கண்காட்சியும் விற்பனையும் நடைபெறுவதை காணலாம். (படங்கள: பார்த்திபன்)

# தொழில்நுட்ப வல்லுநர்களின் ஆர்ப்பாட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

நிறைவுகாண் மருத்துவவியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஒன்றியத்தினர் நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நாளை செவ்வாய்க்கிழமை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக நிறைவ்காண் மருத்துவவியல் தொழில்நுட்ப வல்லுநர்களின் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர்.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு யாழ்.போதனாவைத்தியசாலையில் இந்த ஆர்ப்பாட்டம் நடாத்தப்படவுள்ளதாகவும் வகுப்பு I இற்குரியவர்களுக்கான பதவியுயர்வு மற்றும் சப்ரா தரம் பெற்ற 10 வருடங்கள் கடமையாற்றியவர்களை தரம் 1 க்கு உயர்த்துதல், சுற்றறிக்கையினை வெளியிடுமாறும், மேலதிக கொடுப்பனவினை உயர்த்துதல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் இந்த ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுக்கவுள்ளதாக நிறைவுகாண் மருத்துவவியல் தொழில்நுட்ப வல்லுநர்களின் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர். (25)

# வாணி கல்வி நிலையத்தின் வெள்ளிவிழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை தும்பளையில் உள்ள தனியார் கல்விநிலையமான வாணிகல்விநிலையத்தின் வெள்ளிவிழா நிகழ்வு நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் தும் பளை நெல்லண்டை அம்மன் கலாச்சார மண்டபத்தில் வாணி ஆசிரியர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கொழும்பு தேசிய வைத்திய சாலையின் வைத்திய கலாநிதி இ.தணிகைவாசன் கலந்து கொண்டார்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள், சிவஸ்ரீ.தியானந்தாக்குருக்கள், அருட்தந்தை டேமியன் அடிகளார், சபா.ரவீந்திரன், தி.திரேஸ்குமார், கே.கே.யோகநாதன், பொ.அரவிந்தன், செ.செல்வச்சந்திரன் போன்றோர் கலந்துகொண்டனர்.

இக்கல்வி நிலையம் 25 வருடங்களுக்கு முன் 1989 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பாட்டு இன்று வரை இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (63)

# சமூகத்தை அலைக்கழிய விட்டிட்டு தலைவர்கள் பிழைக்கிறார்கள்...



வடபுலத்தான் எழுதுவது...

மழயினுள்ளே மருந்திருக்கும்போது அதை விட்டிட்டு மலையேறித் தேடுவதைப்போல பிரச்சினைகளுக்கான தீர்வை அரசாங்கத்துடன் பேசித் தீர்ப்பதற்குப் பதிலாக, சர்வதேச சமூகத்தை நம்பியிருப்பதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னுடைய அணுகுமுறையாகக் கொண்டிருக்கிறது.

இதில் சிறிதரன், சுரேஸ் பிரேமச்சந்திரன், அரியநேத்திரன், மாவை சேனாதிராஜா போன்றவர்கள் முன்னணி ஆட்கள். இவர்கள் புலம்பெயர்ந்தோரின் விருப்பத்துக்காக இங்கே காவடி ஆடுகிறவர்கள்.

காவடி ஆடினால் காசும் வரும் இங்கே வாக்குகளும் வரும் என்று தெரிந்து வைத்திருப்பவர்கள்.

தனிநாட்டுக் கனவோடு நடத்திமுடித்த கூத்துக்களால் பல தசாப்தங்கள் பின்தள்ளிப் பேய்விட்ட நமது மக்களின் வாழ்க்கையை முன்னேற்றுதல், பிரதேசத்தை முன்னேற்றுதல், அபிவிருத்திகளைச் செய்தல்.. என்று அந்த அலுப்புகள் எதுவுமில்லாமல் சும்மா உலகைச் சுத்திவந்திட்டு, ஒற்றுமையைக் காட்ட வாக்குப் போடும்படி மக்களைக் கேட்க வேண்டியதுதான்... "சிங்கள அரசிற்கா தமிழ்த் தேசியத்திற்கா உங்கள் வாக்கு?" என்று உணர்ச்சிகரமாகப் பயமுறுத்தி விட்டால் போதும், மக்கள் பாய்ந்தெழும்பிப் போய் கியூவில் நிண்டு புள்ளடியைப் போட்டுவிட்டுத் திரும்புவார்கள்.

பிறகென்ன நடந்தாலும் தான் என்ன... அந்த ஒருநாள் சிங்கள அரசைத் தோற்கடித்துப் பாடம் படிப்பித்துவிட்டு வந்த திருப்தி ஒன்றே போதாதா?...

தேர்தல்களில் இவர்கள் வெல்வதற்கு அரசஎதிர்ப்பு ஆவேசத்தை தக்க வைத்திருக்க வேண்டியிருக்கு. அந்த நோக்கத்திலேயே எதிர்ப்பைத் தொடர்ந்து பேசிவருகிறார்கள்.

அரசாங்கத்தை எதிரியாகவே அணுகுவதால் இவர்களால் மாகாணசபையை வைச்சுக்கொண்டும் ஒண்டுஞ் செய்யமுடியாமல் வாற காசையும் திரும்பிப்போக விட்டிட்டு ஏமிலாந்த வேண்டியிருக்கு. அணுகுமுறைகள் சரியாக இருந்தால் தானே நன்மைகளை எதிர்பார்க்க முடியும் என்பதை தமிழர்களில் பெரும்பாலானவர்கள் விளங்கிக்கொள்வதில்லை.

தங்களுடைய சொந்த வாழ்வின் முன்னேற்றத்திற்காக பலவற்றில் சமரசம் செய்யும் ஆட்கள் அரசியல் ரீதியாக தீவிர நிலைப்பாட்டில் இருப்பார்கள்.

தங்கள் சொந்தப் பிரச்சினை ஒன்றைத் தீர்க்க வேண்டும் என்றால், அதற்காக பல தந்திரோபாயங்களைக் கையாண்டு நாசூக்காக காரியம் பார்ப்பவர்கள். அரசியல் விவகாரம் என்றால் ஒரு படிகூட இறங்க முடியாது என்று அடம்பிடிப்பார்கள்.

உதாரணமாக புலம்பெயர்ந்தவர்களை எடுத்துக் கொள்வோம்.

இவர்களுடைய பயணங்கள் எப்படி அமைந்தன? கௌரவப் பிரஜைகளாகவா எல்லோரும் இந்த நாடுகளுக்கு சென்று சேர்ந்தனர்.?

அல்லது அங்கெல்லாம் செங்கம்பள வரவேற்பா இவர்களுக்கு வழங்கப்பட்டது?

அன்று இருந்த நிலைமையில், எப்படியோ, எங்கோ தப்பிச் செல்ல வேண்டும் என்ற நோக்கம் மட்டுமே இருந்தது.

அதற்காக எதையெல்லாமோ செய்துகொண்டார்கள். அப்படி எதையாவது செய்ய வேண்டியிருந்தது. ஏனென்றால், நோக்கம் நிறைவேற வேண்டுமே.

ஆனால், இதையெல்லாம் நம்மவர்கள் விளங்கிக்கொள்வதில்லை.

அரசியல் உரிமை என்பதும் சொந்த நாட்டில் அதைப் பெறுவது என்பதும் அப்படி யானதல்ல என்று சிலர் இதையிட்டு மறுப்புக் கூறலாம்.

நானும் சொல்கிறேன் அரசியல் உரிமையை மட்டுமல்ல வாழ்வதற்கான எந்த உரிமை-களையும் யாரும் யாரிடமும் கையேந்திப் பெறுவதில்லை. யாசிப்பதும் இல்லை.

ஆனால், உலகம் அப்படியாக இருக்கிறது?

அது அதிகார வர்க்கத்தின் கால்களுக்குக் கீழே கட்டுப்பட்டிருக்கிறது.

இந்த அதிகார வர்க்கத்தை எதிர்ப்பவர்களும், விமர்சிப்பவர்களும் இதற்கெதிராக போராடவும் புரட்சி செய்யவும் தயாரா?

வேண்டுமானால், இந்த அதிகாரத்தரப்பின் மீது மக்களுக்கு இருக்கும் வெறுப்பையும் அதிருப்தியையும் சொல்லி அல்லது விமர்சித்து, அதன் மூலம் உருவாகும் போலிப்-பிம்பத்தை கட்டமைத்துக் கொள்வார்கள்.

இந்த போலிப் பிம்பம் இவர்களை சுத்தமான எதிர்ப்பாளர்களாகவும், புரட்சியாளர்களாகவும் மக்களை நம்பவைக்கிறது.

ஆனால், உண்மை அதுவல்ல, மக்களின் உணர்வுகளை ஏமாத்தி தமது அரசியல் ஆதாயங்களை அடையும் எத்தனமே இது.

இந்த ஏமாற்று வித்தையில்தான் தமிழ் சமூகம் அலைக்கழிந்து கொண்டிருக்கிறது. தமிழ்த் தலைமைகள் பிழைத்துக் கொண்டிருக்கின்றன.

இது மனித விதிக்கு மாறானது.

மனித விதிக்கு மாறான எதுவும் மனித வளர்ச்சிக்கு ஏற்றதல்ல.

நேரம் என்பது செலுத்தப்பட்ட அம்பைப் போன்றது; அது திரும்பி வராது. - ஜேஷி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## இரண்டுபடும் ஊரால் கொண்டாட்டம்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியாவுடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்துவதானது அரசாங்கத்தை இரண்டாம் தரத்திற்கு உள்ளாக்குவதுடன் பின்கதவால் செல்லும் செயற்பாடுமாகும் எனக் கூறியுள்ள அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இலங்கைக்கு எதிராக இந்தியா ஒருபோதும் செயற்படாது எனவும் கூட்டமைப்பினருக்கு அறிவுறுத்தியிருக்கிறார்.

பிரச்சினைகளை உணர்ச்சிகரமாகப் பேசி, தேர்தல்களில் தங்களுக்கான பதவிகளை வெல்லும் முனைப்பை மட்டுமே காட்டி வரும் கூட்டமைப்பினர், தீர்வொன்றைக் காண்பதற்குரிய அணுகுமுறையை தங்கள் மனதாலும் நாடுவதில்லை.

மாறாக, தீர்வுக்கான சாத்தியமாயுள்ள நடைமுறைகளைக் குழப்பி விடுவதன் மூலமும் அரச எதிர்ப்பை எண்ணையூற்றி வளர்ப் பதன் மூலமும் தொடர்ந்து பதவிகளைப் பெறும் ஒரே அரசியலையே செய்துவருகிறார்கள்.

மக்கள் தங்களுக்கான தேவைகளைக் கேட்க முடியாதவாறு, வெறுப்பும் பகைவளர்ப்பும் ஆவேசமான பேச்சுக்களும் என்று தந்தி ரமாக அவர்களை ஏமாற்றி வருகிறார்கள்.

தெற்கிலுள்ள வாசுதேவ போன்ற இடதுசாரிகளின் – முற்போக்கு சக்திகளின் – இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்று நியாயமான கருத்துகளை உரைத்து வருபவர்களின் பேச்சுக்களை இவர்கள் சட்டை செய்வதில்லை; தமிழ் மக்களிடம் அதுபற்றிய தங்கள் அபிப்பிரயங்களைப் பகிர்ந்து கொள்வதுமில்லை.

சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச மற்றும் இனவாதத்தைத் தூண்டிவிடும் பேச்சுக்களைப் பேசுவோரின் வார்த்தைகளையே வெகு ஆர்வத்தோடு எதிர்பார்க்கிறார்கள். அதைக் காட்டித்தான் தமிழ் மக்களையும் இனரீதியாக உசுப்பி பகைமூட்டி வைத்திருக்க முடியும் என்று செயற்பட்டு வருகிறார்கள்.

ஒருவருக்கொருவர் உதவி, இரண்டு பக்க இனவாதத்தையும் எரியவிட்டு அதில் அரசியல் குளிர்காய்ந்து கொண்டிருப்பவர்களுக்கு, சிங்களச் சமூகத்தில் இருந்து நியாயமாகப் பேசுவோரையும் பிடிக்காது; அவர்களுடன் போய்ப் பேசவும் பிடிக்காது.

இனங்களுக்குள் முறுகல் நிலையை விரும்பி உருவாக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் செயல்களை மட்டும் அமைச்சர் வாசுதேவ கண்டிக்கவில்லை. சிங்களத் தரப்பிலிருந்து இந்த முறுகல் நிலையை உருவாக்கப் பேசுகிறவர்களையும் வன்மையாகக் கண்டித்தே கருத்துச் சொல்லியிருக்கிறார்.

அண்மையில் பாராளுமன்றத்தில் விசேட உரையாற்றியிருந்த பேராசிரியர் ரொஹான் குணரட்ன வெளியிட்ட கருத்துக்கள் நல்லிணக்கத்தை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கும் நாட்டிற்கு எரிக்கும் அமிலம் போன்றவை என்றும் வாசுதேவ கடுமையான விசனத்தை வெளியிட்டிருக்கிறார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை தடைசெய்திருக்க வேண்டும். அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் விநாயகமூர்த்தி முரளிதரன் போன்றவர்களுக்கு அரசியலில் இடமளிப்பதால் தமது கொள்கைகளையே தொடர்ந்தும் மக்களிடத்தில் கொண்டு செல்வார்கள் என பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்த கருத்துக்களை வாசுதேவ நாணயக்கார கண்டித்திருக்கிறார்.

நாட்டில் தற்போது யுத்தம் நிறைவடைந்து நல்லிணக்கம் தொடர்பில் பேசப்பட்டும் தேசிய ரீதியில் வேலைத்திட்டங்களும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவ்வாறான நிலையில் ரொஹான் குண ரட்ன அமிலக் கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார். இது முழுக்க முழுக்க தவறானதாகும் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறான நியாயபூர்வ நடுநிலைச் சிந்தனையாளர்களைத் தமிழ்த் தரப்பில் காணமுடிவது துர்லபமாயிருப்பதுதான் நமது துரதிர்ஷ்டமாகும். சிங்களத் தரப்பில் இனவாதமற்றுச் செயற்படுவோரையும் கருத்துரைப்போரையும் நமது ஊடகங்களும், தமிழ்த் தலைவர்கள் எனப்படுவோரும் கண்டுகொள்ளாதது போன்ற தந்திரத்தையே கடைப்பிடிக்கிறார்கள்.

ஊர் இரண்டுபடுவதும் எரிவதும் தங்கள் சுயலாபங்களுக்கு உகந்தது என்று கருதுவதாலேயே இரண்டு பக்கத்திலும் இனவாத வாய்வீச்சுக்கள் முதன்மைப்படுத்தப்பட்டு வருகின்றன. - *ஆசிரியர்*

# வடக்கிற்கான அதிவேகப்பாதை நிர்மாணப்பணிகள் விரைவில்

(கொழும்பு)

வடக்கிற்கான புதிய அதிவேகப் பாதையின் நிர்மாணப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று நெடுஞ்சாலைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையில் தற்போதைக்கு தெற்கு அதிவேகப் பாதை, கட்டுநாயக்க அதிவேகப் பாதை உட்பட மூன்று அதிவேகப் பாதைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

தற்போது நான்காவதாக வடக்கிற்கான அதிவேகப் பாதை நிர்மாணிக்கப்படவுள்ளது.

நிர்மாணிக்கப்படவுள்ள வடக்கிற்கான அதிவேகப் பாதையுடன் இணைந்ததாக கண்டிக்கான அதிவேகப் பாதையும் நிர்மாணிக்கப்படவுள்ளது.

வரக்காபொலையை அண்மித்த பகுதியில் இருந்து கண்டிக்கான அதிவேகப் பாதை தனியாகப் பிரிந்து செல்லும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

கொழும்பு புறநகர் சுற்றுவட்டப் பாதையில் இருந்து ஆரம்பமாகும் வடக்கிற்கான அதிவேகப் பாதை மூலம் வடக்கின் உற்பத்திகளை விரைவாக கொழும்புக்கு எடுத்து வர முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் மூலம் வடக்கின் பொருளாதாரத்தில் ஒரு வளர்ச்சி நிலை ஏற்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# மத சார்பு அமைப்புக்களுடன் நிதானமாக நடந்துகொள்ளுங்கள்

## அமைச்சர்களுக்கு மகிந்த அறிவுரை

மத சார்புடைய அமைப்புக்களுடன் மோத வேண்டாம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனைத்து அமைச்சர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மத அமைப்புக்களுடன் அமைச்சர்கள் மோதுவதனை தவிர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு மோதிக் கொள்வதனால் தேவையில்லாத பிரச்சினைகள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகும். மத அமைப புக்களுடன் வேலை செய்யும் போது மிகவும் நிதானமாக செயற்பட வேண்டும், மத அமைப்புக்கள் ஏதேனும் குற்றம் சுமத்தினால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும்.

எனினும் அவர்களின் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை, பதிலளிக்கப் போனால் இந்தப் பிரச்சினை நீண்டு கொண்டே செல்லும். பொதுபலசேனாவின் குற்றச்சாட்டுக்களை யாரும் பெரிதாக கண்டுகொள்வதில்லை.

அவர்கள் எல்லோரையும் விமர்சனம் செய்கின்றார்கள், அவர்களுக்கு பதிலளிக்க முயற்சித்தால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக் கூடும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# சஜித் பிரேமதாஸவை வளைத்துப்போட முயற்சி

## ஆனால் நிபந்தனை போடுகிறார் அவர்

கட்சியின் பிரதித் தலைவர் பதவியை ஏற்றுக் கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ நிபந்தனைகளை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலைமைத்துவ பேரவையை இரத்து செய்தல், கட்சியின் செயற்குழுவிற்கு பத்து பேரை நியமிக்கும் உரிமையை வழங்குதல் உள்ளிட்ட நிபந்தனைகளை சஜித் விதித்துள்ளார்.

ஊவா மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைமைப் பதவியை சஜித்திற்கு வழங்க எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இது குறித்து அறிவிக்க ரணில் தீர்மானித்திருந்தார்.

எனினும், நிபந்தனைகள் விதிக்கப்பட்ட காரணத தினால் பிரதித் தலைவர் பதவி குறித்த அறிவிப்பு காலம் தாழ்த்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மகிந்தவின் பாக். விஜயம் இரத்து செய்யப்பட்டது ஏன்?

கடந்த 21ஆம் திகதி பாகிஸ்தான் செல்லவிருந்த ஜனாதிபதி அந்நாட்டின் அறிவுறுத்தல்களுக்கமைய தனது பயணத்தை இரத்துச் செய்திருந்தார்.

இந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் மாலை திடீரென அமெரிக்காவின் ஹூஸ்ரனுக்கு சென்றுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயணம் அவரது தனிப்பட்ட பயணம் என்றும், அமெரிக்காவில் வாழும் தனது சகோதரனான டட்லி ராஜபக்ஷவை சந்திக்கவே அவர் அங்கு சென்றார் என்றும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பாகிஸ்தானில் கடந்த சில நாட்களாக அந்த நாட்டு எதிர்க்கட்சியான டஷ்லிக் இ - இன்ஸாவ் கட்சி அரசுக்கு எதிராக இஸ்லாமாபாத்தில் பெரும் போராட்டங்களை நடத்திவருகிறது. இதனைக் காரணம் காட்டி மகிந்தவை அங்கு வரவேண்டாம் என்று பாகிஸ்தான் அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர் தனது பயணத்தை இரத்து செய்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கூட்டமைப்புக் குழுவினர் இந்தியா சென்ற அதே காலப்பகுதியில் பாகிஸ்தான் சென்று அந்நாட்டுப் பிரதமர் உள்ளிட்ட தலைவர்களைச் சந்திக்க இலங்கை ஜனாதிபதி திட்டமிட்டிருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# நாடாளுமன்றில் ஒலித்தது ஸ்ரீரங்கா எம்.பி.யின் "ஜோக்"

நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமிடம், சுவிட்சர்லாந்து அமைச்சர் ஒருவர் எழுப்பிய கேள்வி பற்றிய தகவலை நாடாளுமன்றில் வெளியிட்டார் ஜெ.ஸ்ரீரங்கா எம்.பி. நாடாளுமன்றில் நேற்று முன்தினம் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவா தத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அதாவது, கடல்சார் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதற்காக சுவிட்சர்லாந்து அமைச்சர் ஒருவர் கொழும்பு வந்துள்ளார்.

அவருடன் நீதியமைச்சர் ஹக்கீமே உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளார். இதன்போது, குறித்த அமைச்சரிடம் எமது நீதிஅமைச்சர் கேள்வியொன்றை எழுப்பியுள்ளார். சுவிட்சர்லாந்தில் கடல் வளம் இல்லை. எனவே, எதற்காக கடல்சார் உடன்படிக்கையில் கைச்சாத்திடுகின்றீர்கள் ஏன்பதே அந்தக் கேள்வியாகும்.

இதற்கு பதில் வழங்கிய சுவிட் சர்லாந்து அமைச்சர், நீதியே இல்லாத நாட்டில் நீங்கள் நீதியமைச்சராக இருக்க முடியும் என் றால், கடல்வளம் இல்லாத நாட்டில் ஏன் நான் கடல்சார் அமைச்சராக இருக்க முடியாது? என்று கேள்வி எழுப்பியுள்ளார் என்று ரங்கா எம்.பி. குறிப்பிட்டார்.

அதேவேளை, சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய ரங்கா எம்.பி., இலத்திரனியல்அடையாள அட்டைக்கு தனிப்பட்ட விவரங்கள் கோரப்பட்டுள் ளன.

இவ்வாறு தனிப்பட்ட விவரங்கள் கோரப்படுவது தமிழர்களுக்கு புதுமையான விடயமல்ல. முன்னர் வடக்கு, கிழக்கில் இருந்த நடைமுறை இன்று தெற்குவரை வியாபித்துள்ளது.

நாட்டில் தகவல் அறியும் சட்டம் இல்லை. தரவுகளை பாதுகாப்பது சம்பந்தமான சட்ட ஏற்பாடும் இல்லை. இந்நிலையில் எவ்வாறு தனிப்பட்ட தரவுகளை பாதுகாக்க முடியும்.

தகவல்கள் கசியுமானால் பாதிக்கப்பட்ட தரப்பினர் எவ்வாறு சட்டத்தின் நிவாரணத்தைப் பெறுவது? எனவே, சட்டத்துக்கு புறம்பான வகையில் இலத்திரனியல் அட்டைக்குரிய விண்ணப்பங்களை விநியோகிப்பவர்களை கைதுசெய்ய வேண்டும் என்றார்.

## வானவில் 42 தலையங்கத்திலிருந்து

# ஆட்சி மாற்றம் என்ற கோசம் நாட்டை பின்னோக்கி இழுத்துச் செல்வதற்கே!

இலங்கையில் ஓர் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதே இப்பொழுது பலரினதும் ஒரே அவா-வாக இருக்கின்றது. அதற்கான காரணத்தை ஒரே வாக்கியத்தில் சொல்லிவிட முடியாது.

ஆட்சி மாற்றத்தை விரும்புவபர்களில் பல விதமான தரப்பினர்கள் இருக்கின்றனர். அவர்களது நோக்கங்களிலும் பல விதமான காரணங்கள் இருக்கின்றன. அதேநேரத்தில், "பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காக முடிந்துவிடுமோ" என்ற அச்சமும் அவர்களில் சில தரப்பினர்களுக்கு இருக்கின்றது.

ஏனெனில் ஜனநாயகத்தைக் கொண்டு வருவதற்காக சொல்லிக் கொண்டு, ஈராக்கிலும், லிபியாவிலும், எகிப்திலும் செய்த ஆட்சிக் கவிழ்ப்புகள் எதிர்மாறான விளைவுகளையே ஏற்படுத்தியிருக்கின்றன.

அதாவது ஆட்சி மாற்றம் செய்தவர்கள் சொன்ன "சர்வாதிகார" அரசுகள் அந்த நாடுகளில் போய்விட்டாலும், அதற்குப் பதிலாக மோசமான மத அடிப்படைவாத அரசுகள் அந்த நாடுகளில் தோன்றியுள்ளன. சிரியாவில் ஆசாத்தின் ஆட்சி கவிழ்க்கப்பட்டாலும் அதே மாதிரியான நிலைமைதான் ஏற்படும்.

> **இடதுசாரிகள் மட்டுமின்றி, அரசில் இணைந்துள்ள சிங்கள இனவாத சக்திகளும் கூட ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையையே கொண்டிருக்கின்றன. இது தமிழ் இனவாத சக்திகளுக்கும் சிங்கள இனவாத சக்திகளுக்கும் இடையிலான ஒரு அடிப்படை வித்தியாசம். தமிழ் இனவாத சக்திகளின் எல்லாப் பிரிவுகளுமே எப்பொழுதுமே ஏகாதிபத்திய விசுவாசிகளாக இருந்து வருகின்றனர்.**

இலங்கையைப் பொறுத்தவரை, தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசில் பல விதமான சக்திகள் இருக்கின்றன. தேசியவாதிகள், ஜனநாயகவாதிகள், இடதுசாரிகள், இனவாதிகள், பழமைவாதிகள், அடிப்படைவாதிகள் எனப் பல சக்திகள் அதில் இணைந்துள்ளன.

ஆனால் தலைமைச் சக்தியாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியே இருந்து வருகின்றது. அக்கட்சியில் பலமான ஒரு வலதுசாரிப் பிரிவு எப்போதும் இருந்து வந்த போதும், அதன் தலைமையும், அடிமட்ட சக்திகளும் எப்பொழுதும் ஜனநாயகத்தையும், ஏகாதிபத்திய எதிர்ப்பையும் உயர்த்திப் பிடிப்பனவாக இருந்து வந்துள்ளன.

அதன் காரணமாகவே 1956இல் அமைந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் முதலாவது ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசுக்கு இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவு இருந்தது. அதேபோல சிறீமாவோ பண்டாரநாயக்க 1960இல் ஆட்சி அமைத்தபோதும் இடதுசாரிகளின் ஆதரவு இருந்தது.

1964இல் இடதுசாரிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சி சிறீமாவோ அரசின் பங்காளியாகவும் மாறியது. 1970இல் அமைந்த சிறீமாவோ தலைமையிலான அரசில் லங்கா சமசமாஜக் கட்சியுடன் கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து கொண்டது.

1978இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வந்த புதிய அரசியல் சாசனத்தால் மக்கள் விரோத, எதேச்சாதிகார நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையும், விகிதாசாரப் பிரதிநிதித்துவமும், விருப்புவாக்கு முறையும் அமுலுக்கு வந்தன.

இந்தப் புதிய அரசியல் சாசனம் இரண்டு தீய விளைவுகளை - அதாவது ஜனநாயக விரோதப் போக்கையும், இனவாதப் போக்கையும் தீவிரப்படுத்தியது. அந்த அரசமைப்பு தனியொரு கட்சியின் வெற்றி வாய்ப்பைத் தட்டிப் பறித்ததின் காரணமாக உருவானதே சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு.

அதிலும் வழமைபோல இடதுசாரிகள் இடம்பெற்றாலும், முதலில் ஜே.வி.பி போன்ற சிங்கள இனவாத சக்தியும், பின்னர் ஹெல உறுமய, விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி போன்ற தீவிர சிங்கள இனவாத சக்திகளும் இடம்பெறத் தொடங்கின.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வந்து அரசில் இணைந்து கொண்டவர்கள் காரணமாக, சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் வலதுசாரிகளினதும், இனவாதிகளினதும் பலமும் அதிகரித்தது.

இருந்தும் இடதுசாரிகள் மட்டுமின்றி, அரசில் இணைந்துள்ள சிங்கள இனவாத சக்திகளும் கூட ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையைக் கொண்டிருப்பதால்தான், (இது தமிழ் இனவாத சக்திகளுக்கும் சிங்கள இனவாத சக்திகளுக்கும் இடையிலான ஒரு அடிப்படை வித்தியாசம். தமிழ் இனவாத சக்திகளின் எல்லாப் பிரிவுகளுமே எப்பொழுதுமே ஏகாதிபத்திய விசுவாசிகளாக இருந்து வருகின்றனர்) சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகளை ஏகாதிபத்திய சக்திகள் தொடர்ந்து எதிர்த்து வருகின்றன.

> **அரசு மீது மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதானால், அரசுக்குள் உள்ள இனவாத சக்திகளையும், மக்கள் நலன் பேணும் நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருக்கும் அதிகார வர்க்கத்தையும் ஓரம்கட்டி வைக்க வேண்டும். பிரதானமாக தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வுகாண வேண்டும்.**

அதிலும் தற்போதைய மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு புலிகளை ஒழித்துக் கட்டியதிலிருந்து ஏகாதிபத்திய சக்திகளும், உள்ளூரிலுள்ள ஏகாதிபத்திய சார்பு தமிழ் - சிங்கள பிற்போக்கு, இனவாத சக்திகளும் ஒரே வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றிணைந்து செயற்பட ஆரம்பித்துவிட்டன.

இந்த தேசவிரோதக் கூட்டில் ஐ.தே.க, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, சரத் பொன்சேகாவின் கட்சி, மனோ கணேசன் குழு என்பன இணைந்துள்ளன. இவர்கள் எதிரும் புதிருமாக இனவாதம் பேசினாலும், ஏகாதிபத்திய விசுவாசத்திலும், இன்றைய ஏகாதிபத்திய விரோத இலங்கை அரசாங்கத்தை அகற்றுவதிலும் ஒத்த நோக்குடன் செயற்படுகின்றன.

ஜே.வி.பி தன்னை ஏகாதிபத்திய விரோத, சோசலிச கட்சி என்று சொல்லிக் கொண்டாலும், அதன் இனவாதப் போக்கும், அரச எதிர்ப்புச் செயற்பாடுகளும் ஐ.தே.க தலைமையிலான தேச விரோத சக்திகளுக்கு உறுதுணையாகவே இருக்கின்றன.

இந்த சக்திகளின் இன்றைய ஒரே நோக்கம் இலங்கையில் தற்போது இருக்கின்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசாங்கத்தை எப்படியாவது தூக்கி எறிய வேண்டும் என்பதே. இதற்காகவே உள்நாட்டில் ஐ.தே.கவும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தீவிரமாக செயற்படுகின்றன.

அதேபோல சர்வதேச அரங்கில் மீதமிச்சமுள்ள புலிகளும், உருத்திரகுமாரனின் "நாடு கடந்த தமிழீழ அரசாங்க"மும், ஏகாதிபத்திய சக்திகளும் கைகோர்த்துச் செயற்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இவர்களுடன் தமிழகத்தில் உள்ள இனவாத - பிழைப்புவாதக் குழுக்களும் இணைந்துள்ளன.

அதேநேரத்தில், இந்த ஆட்சி மாற்றத்துக்கான நம்பிக்கையை இந்தப் பிற்போக்கு சக்திகளிடம் விதைத்ததில் கணிசமான அளவுக்கு மகிந்த அரசாங்கத்தின் பங்கும் உள்ளது. இந்த அரசு யுத்தம் முடிவடைந்து 5 வருடங்களாகியும் இனப் பிரச்சினைக்கான தீர்வை இழுத்தடித்து வருவது, ஜே.ஆரின் 1978ஆம் ஆண்டு மக்கள் விரோத அரசியலமைப்பை தொடர்ந்து வைத்துக்கொண்டு இருப்பது, ஆயுதப் படைகளின் அத்துமீறல்களை சரியான முறையில் விசாரித்து குற்றமிழைத்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்குவதில் அசமந்தமாக இருப்பது, நிர்வாகச் சீர்கேடுகள் - ஊழல்களைக் களைவதில் அக்கறையற்று இருப்பது, ஜனநாயக மற்றும் ஊடக சுதந்திரங்களை மட்டுப்படுத்த முனைவது போன்ற காரணங்களால், பிற்போக்கு சக்திகள் உற்சாகமும் நம்பிக்கையும் அடைந்துள்ளன.

மறுபக்கத்தில், அண்மையில் நடந்து முடிந்த தென் மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சியின் வாக்கு வீதம் 10 வீதத்தால் குறைவடைந்திருப்பதானது, ஏதோ ஒரு வகையில் மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் மீது அதிருப்தி ஏற்பட்டிருப்பதையே எடுத்துக் காட்டுகின்றது. அதுமாத்திரமின்றி, இடதுசாரி - ஜனநாயக சக்திகளின் ஒரு பிரிவினரும் அரசு மீது அதிருப்தி கொண்டுள்ளதையும் காணமுடிகிறது.

எனவே அரசு தனது தவறுகள் என்ன என்பதை ஆராய்ந்து அவற்றைத் திருத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. குறிப்பாக அரசு மீது மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதானால், அரசுக்குள் உள்ள இனவாத சக்திகளையும், மக்கள் நலன் பேணும் நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருக்கும் அதிகார வர்க்கத்தையும் ஓரம்கட்டி வைக்க வேண்டும். பிரதானமாக தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வுகாண வேண்டும்.

எப்படிப் பார்த்தாலும், இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இரண்டு கட்சிகளே மாறிமாறி ஆட்சிக்கு வந்துள்ளன. அதில் ஒன்று ஏகாதிபத்தியத்திற்கு விசுவாசமான, மக்கள் விரோத, இனவாத ஐ.தே.க தலைமையிலான அரசுகள். மற்றது சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசபக்த சக்திகளின் அரசுகள்.

இன்றும் இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில்தான் போராட்டம் நடைபெறுகின்றது. ஒரு சரியான இடதுசாரி அணி பலமாக கட்டியெழுப்பப்படாத வரையில், இந்த இரண்டு சக்திகளுக்குமிடையில்தான் போராட்டம் என்பதுதான் யதாத்தமாக உள்ளது.

இதில் ஏகாதிபத்திய சார்பு அணி எமக்கென உள்ள சுவரையே (நாட்டை ஏகாதிபத்தியவாதிகளுக்குத் தாரைவார்த்து) அழிக்க முயல்கிறது. இன்று ஆட்சியில் இருக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு அணி அழகான சித்திரத்தைக் கொண்டிருக்காவிட்டாலும், எமக்கென உள்ள சுவரைப் பாதுகாக்க முயற்சிக்கின்றது.

இதில் எமக்குச் சுவர் தேவையென்பது தான் மிக முக்கியமானது. அப்பொழுதுதான் நமக்கு விருப்பமான சித்திரத்தைத் தீட்ட முடியும். இந்த உண்மையை அனைத்து தேசபக்த - ஜனநாயக - முற்போக்கு சக்திகளும் புரிந்து கொண்டு, ஆட்சி மாற்றம் என்ற ஏகாதிபத்திய மற்றும் பிற்போக்குச் சக்திகளின் சதியை முறியடிக்க வேண்டும்.



# இராஜதந்திர சேவையை பலப்படுத்துகிறது அரசு

(கொழும்பு)

நாட்டின் இராஜதந்திர சேவைகள் பாரப்படுத்தும் நடவடிக்கையில் அரசு இப்போது இறங்கியுள்ளன.

இதற்கான ப்ல்வேறு நடவடிக்கைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் மிக முக்கிய அம்சமாக நடந்த இராஜதந்திர சேவையில் ஈடுபட்டிருக்கும் இராஜதந்திரிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்கு வசதியாக நிபுணர் குழு ஒன்று விரைவில் நியமிக்கப்படவுள்ளது.

இராஜதந்திர விவகாரங்கள் தொடர்பில் ஆலோசனை பெற்றுக்கொள்ள விசேட நிபுணர் குழுவொன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமிக்கத் தீர்மானித்துள்ளார்.

இராஜதந்திர சேவையில் நிபுணத்துவம் பெற்ற மூன்று பேரும், இரண்டு பல்கலைக் கழக பேராசிரியர்களும் இந்தக் குழுவில் அங்கம் வகிக்க உள்ளனர்.

விசேட நிபுணர் குழுவிற்கான பிரதிநிதிகளை ஜனாதிபதி விரைவில் நியமிக்க உள்ளார். கொழும்பு பல்கலைக்கழகத்தின் சர்வதேச விவகாரம் குறித்த பேராசிரியர் ஒருவரும் இந்தக் குழுவில் அங்கம் வகிக்க உள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் ஒரு சில நடவடிக்கைகள் குறித்து ஆளும் கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு கிளம்பி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த எதிர்ப்பினை சமாளிக்கும் நோக்கிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு விசேட நிபுணர் குழு ஒன்றை நியமிக்கவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

# இரயில்வே திணைக்களத்தில் இப்போது பெண்கள் இராச்சியம்

## தொழிற்சங்கம் போர்க்கொடி

(கொழும்பு)

தொடருந்து திணைக்களத்தில் உள்ள பதவி பிரதியீடுகளின் போது பெண்களை நியமிக்காதிருக்குமாறு வலியுறுததப்பட்டுள்ளது.

தொடருந்து சேவை தொழிற்சங்க சம்மேளனம், போக்குவரத்து அமைச்சிடம் இந்த கோரிக்கையை விடுத்துள்ளது.

தற்போதும் தொடருந்து திணைக்களத்தில் அதிக அளவான பெண் பணியாளர்கள் இருப்பதாக சங்கத்தின் செயலாளர் சம்பத் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் மேலும் பதவிகளுக்கு பெண்களை இணைத்துக் கொள்ள முயற்சிக்கப்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் போக்குவரத்துத் துறை அமைச்சர் குமார் வெல்கமவை தொடர்பு கொணடு கேட்ட போது, தொடருந்து திணைக்களத்தின் பெரும்பாலான பணிகளுக்கு பெண்களை இணைத்துக் கொள்ளமுடியாயது என்று குறிப்பிட்டார்.

# சிறைச்சாலைகளில் ஓட்டை கைதிகள் தப்பி ஓட்டம்

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் நூறு கைதிகள் சிறையிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

தப்பிச் சென்றுள்ளவர்களில் 80 வீதமானவர்கள் சிறைச்சாலை வளாகத்திற்குள் தங்க வைக்கப்பட்டிருந்த கைதிகளும், இதர பணிகளுக்காக வெளியிடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கைதிகளுமே ஆவர். என்று சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளரும், பொறுப்பதிகாரியுமான டீ.என். உபுல்தெனிய குறிப்பிட்டுள்ளார்.

தப்பிச் சென்றிருந்தவர்களில் நீதிமன்ற விசாரணைகளின் போது ஆஜராகிய சிலர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சிறையிலிருந்து தப்பிச் சென்றுள்ள கைதிகளைக் கைது செய்வதற்கான தகவல்களை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும், சிறைச்சாலைகள் திணைககளத்தின் ஊடகப் பேச்சாளரும், பொறுப்பதிகாரியுமான டீ.என். உபுல்தெனிய சுட்டிக்காட்டியுள்ளார்.

# கிழக்கிலும் தமிழ் யுவதிகள் இராணுவ பயிற்சியுடன் வெளியேறினர்

கிழக்கு மாகாணத்தில் மூன்று மாத கால இராணுவ பயிற்சியை நிறைவு செய்த 36 தமிழ் யுவதிகள் நேற்றுமுன்தினம் வெளியேறினர். இப் பயிற்சி நெறியின் நிறைவு விழா, திருகோணமலையிலுள்ள 22 ஆவது படைப்பிரிவின் தலைமை அலுவலகமான பிளான்ரன் பொயின்ற் முகாமில் நடைபெற்றது.

இவ்விழாவில், பிரிகேடியர் சண்முகநாதன், பிரதம அதிதியாக கலந்துகொண்டு இராணுவ வீராங்கனைகளின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.



இப்பயிற்சிநெறியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மண்டூரைச் சேர்ந்த தெய்வேந்திரன் ரஞ்சிதா என்ற யுவதி கௌரவிக்கப்பட்டார். கிழக்கு மாகாணத்தில், திருகோணமலையில் 16 பேரும், மட்டக்களப்பில் 15 பேரும், அம்பாறையில் 5 பேரும் இப்பயிற்சிநெறியை நிறைவு செய்துள்ளனர். இவர்களுள் அம்பாறையைச் சேர்ந்த மு.றிசானா என்ற இஸ்லாமிய யுவதியும் உள்ளடங்குகிறார்.

கிழக்கு மாகாணத்தில் புதிதாக இராணுவத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட தமிழ் யுவதிகளுள், முதலாவதாக பயிற்சிநெறியை நிறைவு செய்தவர்கள் இவர்களென்பது குறிப்பிடத்தக்கது.

# வரி வருமானம் சரிவு இரகசிய அறிக்கை கசிவு

(கொழும்பு)

அமைச்சரவை உபகுழுவின் மிகவும் இரகசியமான அறிக்கை ஒன்றின்படி நாட்டின் கடந்த வருடம் மொத்த உள்நாட்டு உறபத்தியில் 11 வீதம் மாத்திரமே வரி வருமானமாக கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வரி வருமானங்களுக்கு கீழ் 2015 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகள் நிச்சயமற்றவையாக மாறியுள்ளன.

ஆங்கிலச் செய்தித்தாள் ஒன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

உரிய முகாமைத்துவமின்மையே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரகசிய தகவலின்படி இந்த வருட ஆரம்பத்திலும் வரி வருமானத்தில் குறைவு காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டின் வரி வருமானம் 1168 மில்லியன் ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டுக்கான வரி வருமானம் 1361 மில்லியன் ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இதில் அதிகரிப்பு உள்ள போதும் அந்த அதிகரிப்பு 21 வீதமாக அமையவேண்டும்.

எனினும் 2015 ஆம் ஆண்டுக்கான வரி வருமான வீத வளர்ச்சி 11 வீதமாகவே உள்ளது என்று ஆங்கில செய்தித்தாள் சுட்டிக்காட்டியுள்ளது.


# மனோகணேசனின் தாயார் காலமானார்

மூத்த தொழிற்சங்கவாதி, மறைந்த வி.பி.கணேசனின் பாரியார் நேற்றுமுன்தினம் காலமானார். இவர் பிரதி அமைச்சர் பிரபா கணேசன், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான மனோ கணேசன், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் பிரகாஸ் கணேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல், தெஹிவளை, பாமன்கடை ஸ்ரீ மகா விஹாரை வீதியில் இலக்கம் 24 இல் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. நாளை மறுதினம் புதன்கிழமை இறுதிக் கிரியைகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

# துண்டாடும் கோரிக்கைகளுக்கு துணைபோக மாட்டார் மோடி

## குன்றாத நம்பிக்கையில் ஞானசாரதேரர்



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாட்டைத் துண்டாடும் வகையிலான கோரிக்கைகளுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி துணைபோக மாட்டார். முன்பிருந்த ஆட்சியாளர்கள் இனப்பிரச்சினை தீர்வு குறித்து பல அழுத்தங்களைக் கொடுத்து வந்துள்ளனர். புதிய பிரதமர் மீது எமக்கு பூரண நம்பிக்கை இருக்கிறது என பொது பல சேனா செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தமி[illegible] தேசியக் கூட்டமைப்பினர் மேற்கத்தேய நாடுகளின் [illegible]களாக மாறியுள்ளனர்.

[illegible]ழ மக்களின் அத்தியாவசிய தேவைகளை விடுத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தாம் அரசோச்சும் வகையில் வடக்கு கிழக்கு இணைந்த தனிநாட்டைக் கோருகின்றனர்.

இலங்கை சுயாதீனமான நாடாகும். எனவே வெளிநாட்டுத் தலையீடுகளுக்கு நாம் இடமளிக்க முடியாது.

இருந்தும் இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடி நிலைமையை உணர்ந்து யதார்த்தமாக செயற்படுபவர்.

எனவே அவர் மீது முழு நம்பிக்கை இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

# அபிவிருத்தியை கைவிட்டு அரசியல் நடாத்துகிறது கூட்டமைப்பு

## சாடுகிறார் கெஹலிய



(கொழும்பு)

வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு, வட மாகாணசபை அக்கறை காட்டவில்லை என்று அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. சிரேஷ்ட அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இந்தக்குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

அபிவிருத்திக்கு பதிலாக வடக்கு மாகாணசபை, அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு பாதகமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

13 ஆவது அரசியலமைப்பை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தமது அரசியலுக்காக பயன்படுத்துகிறது. ஏனைய மாகாண சபைகள் யாவும் பொலிஸ் அதிகாரங்கள் இன்றி இயங்கும் போது வடக்கு மாகாணசபை மாத்திரம் ஏன் அதனை வலியுறுத்தி வருகின்றது என்று அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் இந்திய பிரதமரை சந்தித்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும் போது அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# அடிப்படைத் தேவைகளை வழங்கவில்லை

# விசனம் தெரிவிக்கும் எழுதுமட்டுவாள் மக்கள்

(யாழ்ப்பாணம்)

மீளக்குடியேறி 3 ஆண்டுகளான போதிலும் தமது அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்பட வில்லை என விசனம் தெரிவித்ததுடன் தமது அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்வது தொடர்பில் 15 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படாத பட்சத்தில் தாம் உண்ணாவிரதம் இருக்கப்போவதாகவும் எழுதுமட்டுவாள் தெற்கு (ஜே/333) மக்கள் தமது கிராமசேவையாளரிடம் தெரிவித்துள்ளனர்.

கிராமத்தில் நடைபெறும் ச்ட்டவிரோத செயல்கள் தொடர்பிலும் சுகாதாரம் பேணுவது தொடர்பிலும் மக்களுக்கு அறிவூட்டுவதற்காக அப்பகுதி கிராம சேவையாளரால் கூட்டப்பட்ட கூடத்திலேயே மக்கள் மேற்படி கோரிக கையினை விடுத்திருந்தனர்.

கடந்தகால அசாதாரண சூழ்நிலைகளால் இடம்பெயர்ந்து 15 ஆண்டுகளின் பின்னர் மீளக்குடியேறி 3 ஆண்டுகள் கடந்த நிலையில் வாழும் 360 குடும்பங்களில் 68 குடும்பங்களுக்கே வீடமைப்புக் கான உதவிகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் ஏனைய குடும்பங்கள் சுகாதாரமற்ற நிலையில் வாழ்வதாகவும் திறந்த வெளிகளையே மலசலம் கழிப்பதற்கு பயன்படுத்துவதாகவும் வீடு இல்லாது இருப்பதாகவும் அவா கள் மேலும் தெரிவித்தனர்.

மழைகாலம் ஆரம்பிக்க உள்ள நிலையில் வீடுமற்றும் மலசல கூடவசதி இல்லாதவிடத்து தாம் பெரும் அசௌகரியங்களையும் சுகாதாரப் பிரச்சினைகளையும் எதிர்நோக்கவேண்டி இருக்கும் எனவும் மக்கள் மேலும் தெரிவித்தனர். (116)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று....

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் ஆன்மீக சிந்தனையும் சமயச் சொற்பொழிவும் கலைநிகழ்வுகளும் தினமும் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

இதில் தீர்த்தத்திருவிழாவான இன்று காலை நல்லூர் பஜனைக் குழுவினரின் முருக நாம பஜனை இடம்பெறவுள்ளது. தொடர்ந்து மாலை நிகழ்வுகளாக 'பாதந் தொழுவார் பாவம் தீர்ப்பார்' என்னும் விடயம் பற்றி பிரம்மச்சாரி ஜாக்கிரத்சைத்தன்ய சுவாமிகள் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து நவாலி ராஜராஜேஸ்வரி, அராலி அம்பிகை, உடுவில் ராஜராஜேஸ்வரி வசாவிளான் கோசலை ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

♦ ♦ ♦

நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடாத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்வு தினமும் மாலை 6.45 மணி முதல் 8.15 மணிவரை நடைபெற்று வருகிறது.

இதில் தீர்த்தத்திருவிழாவான இன்று கலாநிதி என்.வி.எம். நவரத்தினம் வழங்கும் பாட்டு இசையரங்கம் பக்கவாத்திய சகிதம் இடம்பெறவுள்ளது. (42)

## முரசின் இன்றைய பலன்



(25.08.2014 திங்கட்கிழமை)

ஜய வருஷம் ஆவணி மாதம் 09 ஆம் திகதி.
அமாவாசை / மரணயோகம் / கரிநாள்.
மக நட்சத்திரம் முழு நாளும்.
இராகு காலம் 07.35 - 09.05 வரை. சுபநேரம் 12.05 - 01.35 வரை.

ஜோதிட வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | துணிவினைத் துணையாகக்கொண்டு நியாயத்தை எடுத்துரைத்ததால் முரண்பாடு விலகிவிடல், வீட்டு இரகசியங்களைக் கசியவிடாது தேக்கிவைப்பதினால் காரிசித்தி ஏற்படல். |
| ரிஷபம் | குடை நிழலில் இருந்து யானை மீது பவனிவந்த நிலை மாறிநடைதளர்ந்து கீழ் நிலை அடைதல், சக ஊழியர்கள் மீது கண்ணோட்டம் விட்டதால் பிழைகள் ஏற்படாது பணியின் தேக்க நிலை அற்றுப்போதல். |
| மிதுனம் | நோயின் உபாதை நீங்குவதற்கு தெய்வ தலங்களுக்கு விஜயம் செய்தல், காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உளநலம் மற்றும் உடல்நலம் மேம்பட கவனமெடுத்தல். |
| கடகம் | மணம் புரிய பின்னடித்த காதலன் பற்றி முறைப்பாடு காவல்துறை ஏகுதல், உங்கள் கதிரையில் அமர்வதற்கு சக ஊழியர் ஒருவர் மேலதிகாரிகளுக்கு அள்ளி வைத்தல். |
| சிம்மம் | தனித்தொழிலில் எதிர்பார்த்த அனுகூலம் காணாப் படாதபடியினால் பங்குத்தொழிலில் சேர விரும்புதல், பணிப்புலத்தில் சகபாடிகள் ஒத்துழைத்ததால் வேலைப்பளு துரிதமாக நீங்கிவிடல். |
| கன்னி | உங்கள் புத்திமதியைக் காதில் வாங்கிக் கொள்ளாது நடக்கத்தலைப்படும் பிள்ளைகளை எண்ணித்துயரடைதல், பெற்றோரின் தேகநலனை முன்னிட்டு வெளியூர் பயணத்தை ஒத்திவைத்தல். |
| துலாம் | விழாக்களில் கௌரவிக்கப்படுவதற்கு தம்பதிகள் சகிதம் கலந்து கொள்ளல், புதிய முயற்சியையும் சுபகாரியப் பேச்சுவார்த்தையையும் ஒத்திப்போடுதல் நன்று. |
| விருச்சிகம் | புதிய நபர் ஒருவர் கிட்டியபோது அவர்மீது ஏற்பட்ட சந்தேகத்தினால் உறவினைத்துண்டித்து விடல், ஜாதகப்பொருத்தமின்மையினால் திருமண பந்தம் தள்ளிப்போவதை யிட்டு கவலை கொள்ளல். |
| தனுசு | பிள்ளைகளின் எதிர்கால நலனை முன்னிட்டு சேமிக்கும் முயற்சியில் ஈடுபடுதல், எதிர்பாலாரிடம் பழக முற்படும் போது வார்த்தைகளை உபயோகிக்காதீர்கள். |
| மகரம் | பாரபட்சம் காட்டாது பணியில் ஈடுபட்டதால் புகழாரம் பெறுதல், குடும்ப அங்கத்தவர்கள் மத்தியில் நிலவிக் காணப்பட்ட முரண்பாடுகள் அற்றுப்போதல். |
| கும்பம் | சுகாதார விதிமுறைகளை மீறி தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டு அழித்தல், நீண்ட நாட்களாக கிடைக்காத நிலுவைப்பணம் எதிர்பாராது வந்தடைதல். |
| மீனம் | மருத்துவப்பணியினை துச்சமாக மதித்து மருத்துவரின் செயலையினால் துயரடைதல், அரசுப் பணியில் வேலைப்பளுவும் அலைச்சலும் அதிகாரியின் கண்டிப்பும் இருக்கும். |

## சென்.பீற்றர் அதிபராக ஸ்ரீ நந்தகோபன் நியமனம்



நவாலி சென.பீற்றர் றோ.க.த.க பாடசாலை அதிபராக கந்தையா ஸ்ரீ நந்தகோபன் வட மாகாண கல்வித்திணைக்களத்தால் கடந்த ஜூலை மாதம் 21 ஆம் திகதி முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் 15 ஆண்டுகள் ஆசிரியராக சேவையாற்றி பின் வவுனியா மதியாமடி விவேகானந்த வித்தியாலயம், யா/நவாலி மகா வித்தியாலம் என்பவற்றில் ஆசிரியராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. சிறந்த சமூகசேவையாளரான இவர் பேராதனை பல்கலைக் கழக பி.ஏ.பட்டதாரியும் யாழ் பலகலைக்கழக பண்பாட்டு முதுமாணி பட்டதாரியும் ஆவர். (66)

## மஹோற்சவம்

தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் புதன் கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆம்பமாகி எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிமை காலை 8 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும் என ஆலயநிர்வாக சபை தெரிவித்திருக்கிறது. (66)

# நல்லைக் கந்தனுக்கு இன்று தீர்த்தத்திருவிழா



## தீர்த்தமதில் நானிலமே குளிரட்டும்

நல்லூரான் தீர்த்தமதில் நானிலமே குளிரட்டும்
எல்லையிலாப் பேரின்பம் பொங்கிக்கரை புரளட்டும்
செல்வமும் சிறப்புமிங்கு எல்லோற்கும் சேரட்டும்
உல்லாசக் கந்தனவன் உலகையினி ஆழட்டும்
இல்லையென் றழுவோர்கவன இருப்போனாய் ஆகட்டும்
நல்லைவந்து பணிவோறகவன் நற்றுணையாய் மாறட்டும்
மெல்லிய வேலெழுந்து மேதினியைக் காக்கட்டும்
தொல்பதிநீர் ஆடுவோற்குத் தோசமெலாம் நீங்கட்டும்
மல்லிகையும் முல்லையுமாய் மனங்களெலாம் மாறட்டும்
மெல்லியலார் வள்ளிதெய்வ யானையாரும் அருளட்டும்
கல்வியொடு செல்வதும் கனமழையாய்க் கொட்டட்டும்
வல்லவீர வாழ்வையவன் வாழ்வோற்குக் கொடுக்கட்டும்
நல்லைநீர் ஆடுவோரின் நாமங்கள் துலங்கட்டும்
தில்லைமகன் தீர்த்தமாட திருமழையும் பொழியட்டும்.

-ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம் மூளாய்-

## தீர்த்தமாட வாருமையா!

தீர்த்தமாட வாருமையா
தீர்வொன்றைத் தாருமையா...
பார்த்திருந்தீர் நல்லையிலே
படுவதெல்லாம் தொல்லையாலோ...
குடிநீர் இல்லை குளிக்க ஏதுநீர்
மடியதும் கனம் குன்றிக் கனநாளே
முடியாது பசி வயிற்றைக் கிள்ளுதே
கடிதாய் மயில் ஏறிவந்தருள்வாய்...
நடுநிசி விலை உயரும் நாடிதே
படுபட் சிகாண் தொழில் வளமதே
விடுவித் திவ்வாழ்வு முழுமை தனையே
தடுகுரு நாதனே நல்லை முருகையா...

-'கவிமணி' பரமகவி-

## கைதொழுதோம் காத்திடுவாய்!

பார்த்திருப்போம் நல்லூரிலே பாலசுப்பிரமண்யனின் பேரழகை
கார்த்திகைக் குமரனே உனைக் கைதொழுதோம் காத்திடுவாய்
நேர்த்திகள் யாவும் இன்று நாம் பூர்த்திசெய்திட்டோம் முருகா
தீர்த்தமாடி வந்தே எம் வினை தீர்த்திட வேண்டும் குமரா!

-செல்வி இ.தர்மிலா நல்லூர்-

## தீர்த்தத்திருவிழாவாம்!

தீர்த்த விழாவன்று திருக்குளத்தில் நல்லூரில்
ஆர்ப்பரித்து மூழ்கும் அடியார்க்கு - தீர்த்தத்தாற்
பாவங்கள் தீரும் பணிந்தாடிக் கொண்டாட
ஆவலுந் தீரும் அவர்க்கு.

-நல்லூர் கந்தன் பாமாலை-

## தெய்வத்தீர்த்தம் ஆடிடுவோம்

பிணி தீர்க்கும் தீர்த்தம் ஆடிடுவோம்
பின் புலம் சிறக்க பாடிடுவோம்
கட்டியம் கூறுபவர் கை நழுவ
கந்தக் கடவுளைப் பார்த்து நிற்பர்
வினை தீர்க்க தீர்த்தம் காணீர்
விரைந்தே நல்லூர் தீர்த்தம் ஆடுவீர்
அரச முருகன் உதவியுடன் ஆட்சி
அசையாது பெற்றிடுவோம்.

-ம.கணேசலிங்கம்-

# சாதனை மேல் சாதனை




(கோல்ட்கோஸ்ட்)
பான் பசிபிக் நீச்சல் சம்பியன்ஷிப்பில் அமெரிக்காவின் கேட்டி லிடெக்கி உலக சாதனை படைத்தார்.

அவுஸ்ரேலியாவில் உள்ள கோல்ட்கோஸ்டில் பான் பசிபிக் நீச்சல் சம்பியன்ஷிப் போட்டி நடைபெற்று வருகின்றது. இதன் பெண்கள் 400 மீற்றர் பிரீஸ்டைல் பிரிவில் அமெரிக்காவின் கேட்டி லிடெக்கி பங்கேற்றார். இவர், மூன்று நிமிடம் 58.37 வினாடிகளில் கடந்து உலக சாதனை படைத்தார். தவிர, கடந்த 9ஆம் திகதி அமெரிக்காவில் நடைபெற்ற தேசிய சம்பியன்ஷிப்பில் நிகழ்த்திய தனது முந்தைய (3:58.86) சாதனையை முறியடித்தார்.

இதன் மூலம், 400 மீற்றர் (3:58.37) 800 மீற்றர் (8:11.0) மற்றும் 1500 மீற்றர், (15:34.23) பிரீஸ்டைல் பிரிவில், சக வீராங்கனை ஜானித் எவன்ஸ்க்குப்பின் உலக சாதனை படைத்த முதல் பெண் என்ற பெருமை பெற்றார்.

17 வயதான கேட்டி 400 மீற்றர் சம்பியன் பட்டம் வென்றதன் மூலம், பான் பசிபிக் சம்பியன்ஷிப்பில் 4ஆவது தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார். இதற்கு முன் 200 மீற்றர் 800 மீற்றர் மற்றும் 4X200 மீ., பிரீஸ்டைல் பிரிவுகளில் தங்கத்தை கைப்பற்றியிருந்தார்.

இதேவேளை, ஆண்கள் 100 மீற்றர் பட்டர்பிளை பிரிவில், அமெரிக்க நட்சத்திரம் மைக்கல் பெல்ப்ஸ் (29 வயது) தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தார். ஒலிம்பிக் போட்டியில் 18 தங்கம் உட்பட மொத்தம் 22 பதக்கங்களை பெற்று மகத்தான சாதனை வீரராக விளங்கும் பெல்ப்ஸ், லண்டன் ஒலிம்பிக் போட்டிக்குப் பின்னர் ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது. தனது ஓய்வு முடிவை மாற்றிக் கொண்டு, மீண்டும் களமிறங்கத் தொடங்கி உள்ள அவர் கோல்ட் கோஸ்ட் தொடரில் தங்க வேட்டையை ஆரம்பித்துள்ளார்.



# விதிமுறையை மீறிய பந்து வீச்சு இலங்கை கிரிக்கெட் சபை நடவடிக்கை

(கொழும்பு)

விதிமுறைகளைத் தாண்டி பந்துவீசும் பந்துவீச்சாளர்களை இனம் காணும் நடவடிக்கையில் இலங்கை கிரிக்கெட் சபை இறங்கியுள்ளது.

தற்போது நடைபெற்று வரும் பாடசாலை மட்ட தரம் ஒன்று கிரிக்கெட் போட்டிகளில் பந்தை வீசி எறிபவர்களை இனம் காணுமாறு நடுவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதன் படி ஒரு மாத காலத்துக்குள் 25 பேர் சந்தேகமான முறையில் பந்து வீசுகின்றார்கள் என இனம் காணப்பட்டுள்ளது. இதில் அநேகமானவர்கள் ஒப் ஸ்பின் பந்து வீச்சாளர்கள்.

பந்தை வீசி எறிதல் பாரிய பிரச்சினையாக தற்போது இருந்து வருவதாகவும் குறித்த நடவடிக்கை மூலம் அது குறைவடைந்து வருவதாகவும் பந்து வீச்சாளர்கள் சரியாக பந்து வீசுவதாகவும் ஒரு முறை முறையற்ற பந்து என கூறப்பட்டால் பின்னர் குறித்த பந்துவீச்சாளர் சரியாக பந்து வீசுவதாகவும் நடுவர்களுக்கான பயிற்சிகளை வழங்கும் டிரோன் விஜயரட்ன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெறும் போட்டிகளில் ஒருவர் பந்தை வீசி எறிகின்றார் என குற்றம் சாட்டப்பட்டால் அவர் பந்து வீசுவதில் இருந்து தடை செய்யப்படுவார். அதன் பின்னர் இலங்கை பயிற்சியாளர்கள் நிலையம் அவரின் பந்துவீச்சு பாணியில் மாற்றங்களை உருவாக்கும். அதில் மாற்றங்கள் உண்டு.

விதிமுறைகளுக்கு அமைவாக பந்துவீசுகின்றார்கள் என நிரூபிக்கப்படும் நிலையில் மீண்டும் பந்துவீச முடியும். சர்வதேச கிரிக்கெட் சபையின் முறைகளில் இருந்து இந்த முறை முற்றிலும் வித்தியாசமானது என டிரோன் விஜயரட்ன மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்தியா, இங்கிலாந்து
## ஒரு நாள் தொடர் இன்று ஆரம்பம்

(லண்டன்)

இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக்கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் ஆட்டம் இன்று இங்கிலாந்தின் பிறிஸ்ரெலில் நடைபெறவுள்ளது. இங்கிலாந்திற்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள இந்திய அணி ஐந்து போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் படுதோல்வியடைந்துள்ளது.

இந்நிலையில், ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் ஆட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது. பயிற்சிப் போட்டியில் சிறப்பான வெற்றியைப் பதிவாக்கியுள்ள இந்திய அணி ஒரு நாள் தொடரை வெல்லும் முனைப்புடன் செயற்படும் என கிரிக்கெட் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, டெஸ்ட் தொடரைக் கைப்பற்றிய இங்கிலாந்து அணி அதே வழிமுறையில் ஒரு நாள் தொடரையும்கைப்பற்றிக் கொள்ள முயற்சிக்கும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இன்றைய முதலாவது போட்டி இலங்கை நேரப்படி 3.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## இன்று இறுதியாட்டம்

பங்களாதேஷ், மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதி ஆட்டம் இன்று மேற்கிந்தியதீவுகளின் பொஸ்ரோவில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே, நடைபெற்ற இரு போட்டிகளிலும் மேற்கிந்தியதீவுகள் அணி வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றியுள்ளது. இந்நிலையில் இறுதிப் போட்டியில் ஆறுதல் வெற்றியைப் பெற்றுக்கொள்ள பங்களாதேஷ் அணி போராடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொடரை முழுமையாக வெல்வதே எங்கள் இலக்கு. இறுதிப் போட்டியில் சிறப்பாகச் செயற்பட்டு வெற்றியைப் பதிவாக்குவோம் என மே.தீவுகள் அணிக் கப்டன் பிராவோ தெரிவித்தார்.

# "பட்ட காலிலேயே படும்" நெய்மர் நிலையும் அதுதான்



(கேம்ப் நோவ்)

உலக கிண்ணக் கால்பந்து தொடர் காயத்தில் இருந்து மீண்ட நெய்மருக்கு மீண்டும் கணுக்காலில் காயம் ஏற்பட்டது.

பிரேசிலில் நடைபெற்ற உலக கிண்ண கால்பந்து தொடரின் காலிறுதியில், பிரேசில் நட்சத்திர வீரர் நெய்மர் முதுகுப்பகுதியில் எலும்பு முறிந்தது. இதில் இருந்து மீண்ட இவர், சமீபத்தில் நடைபெற்ற மெக்சிக்கோ கிளப் அணிக்கு எதிரான நட்பு போட்டியில் பங்கேற்றார்.

இதனிடையே, பார்சிலோனா கிளப் அணியில் விளையாடும் நெய்மர், லா லிகா தொடரில் எல்சே அணிக்கு எதிரா... சாதிக்க, பயிற்சியில் ஈடுபட்டார். ...வரது இடது கணுக்காலில் ஏற்பட்டது.

இதுகுறித்து பார்சிலோனா இணையத்தளம் வெளியிட்ட அறிக்கையில், பயிற்சியில் நெய்மருக்கு காயம் ஏற்பட்டது உண்மை தான். இது கிரேட்-1 வகையைச் சேர்ந்தது. இதற்கான சிகிச்சையில் இவர் எந்தளவுக்கு முன்னேற்றம் அடைகிறார் என்பதை பொறுத்து தான் மீண்டும் வருவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐஸ் சவாலை ஏற்ற மஹேல, சங்கா



உலகப் பிரபல்யங்கள் ஐஸ் பக்கெட் சவாலை ஏற்றுக் கொண்டது மட்டுமன்றி இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களும் இந்தச்சவாலை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இதன்படி இலங்கை அணியின் நட்சத்திர வீரர்களான மஹேல ஜெயவர்த்தன மற்றும் குமார் சங்கக்கார ஆகிய இருவரும் ஐஸ் பக்கெட் விளையாடியுள்ளனர்.

இதனையடுத்து மத்தியூஸ்- அவுஸ்ரேலிய நட்சத்திர வீரர் மைக்கல் கிளார்க் மற்றும் இந்திய நட்சத்திர வீரர் ராகுல் ராவிட் ஆகியோருக்கு மஹேல ஜெயவர்த்தனவினால் சவால் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குமார் சங்கக்காரவினால் இந்திய நட்சத்திர வீரர் ஹோலி- அவுஸ்ரேலிய வீரர் அடம் கில்கிறிஸ்ட் மற்றும் தென்னாபிரிக்க வீரர் டேல் ஸ்ரெய்ன் ஆகியோருக்கு இந்த ஐஸ் பக்கெட் சவால் விடுக்கப்பட்டுள்ளது.

பொதுநல காரியங்களுக்காக நிதி திரட்டும் நோக்கில் நடாத்தப்பட்டுவரும் இந்த ஐஸ் பக்கெட் விளையாட்டின் ஊடாக நன்கொடை வழங்கத் தயாராக உள்ளதாக மஹேல ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது குறித்த காணொளி காட்சிகளை மஹேல ஜெயவர்த்தன மற்றும் குமார் சங்கக்கார தங்களது உத்தியோகபூர்வ பேஸ்புக் சமூக வலைத்தளத்தில் பதிவேற்றியுள்ளனர். இதனை இரசிகர்களும் கண்டு மகிழ்கின்றனர்.

# தொடரை வெல்வோம்

பாகிஸ்தான் அணிக்கெதிரான ஒரு நாள் தொடரை கைப்பற்றுவோம் என இலங்கை அணிக் கப்டன் மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான், இலங்கை அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட முதல் ஆட்டத்தில் இலங்கை அணி நான்கு விக்கெட்டுக்களால் தோல்வியைத் தழுவியது. இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே மத்தியூஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், வெற்றிக்காக இறுதி வரை போராடினோம். இருப்பினும் அதிர்ஷ்டம் பாகிஸ்தான் பக்கம் இருந்துள்ளது. பந்து வீச்சு, துடுப்பாட்டம் என எல்லாத் துறையிலும் நாங்கள் சிறப்பாகச் செயற்பட்டோம். குறிப்பாக பிரியன்ஜன் அதிரடி திருமுறையாக அமைந்தது. ஏனைய இரு போட்டிகளிலும் சிறப்பான முறையில் செயற்பட்டு தொடரைக் கைப்பற்றுவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கைகூடுகிறது கல்யாண யோகம்



ஈட்டி எறிதல் வீராங்கனை லெரின் பிரான்கோவுக்கு திருமண யோகம் வந்திருக்கிறது. நீண்ட நாள் காதலரான இவான் அல்மெய்டாவை விரைவில் கைப்பிடிக்கவுள்ளார்.

பராகுவேயின் ஈட்டி எறிதல் வீராங்கனை லெரின் பிரான்கோ (வயது-32). மூன்று ஒலிம்பிக் (2004, 2008, 2012) போட்டிகளில் பங்கேற்ற ஒரே பராகுவே விளையாட்டு நட்சத்திரம். இவரது அசத்தலான அழகு காரணமாக, இருவருக்கு தனியான இரசிகர்கள் பட்டாளமே உண்டு. கடந்த 2006 இல் நடந்த மிஸ் பராகுவே போட்டியில் இரண்டாவது இடம் பெற்றார்.

மொடலிங் துறையில் கலக்கும் இவர், 2008 பீஜிங் ஒலிம்பிக்கில் 51ஆவது இடம் தான் பெற்றார். இருப்பினும், அப்போது இணையத்தளத்தில் அதிகமாக தேடப்பட்ட விளையாட்டு நட்சத்திரங்களில் அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கல் பெல்ப்ஸ்ஸிற்கு அடுத்த இடம் பெற்றார்.

கடந்த 2012 இல் நடைபெற்ற லண்டன் ஒலிம்பிக்கிலும், லெரின் பிரான்கோ இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறவில்லை. இருப்பினும், செக்சி வீராங்கனை என்ற பட்டம் இவருக்குத் தான் கிடைத்தது.

மூன்று ஒலிம்பிக்கில் பங்கேற்றும் பதக்கம் வெல்ல முடியாத லெரின் பிரான்கோ, காதல் போட்டியில் ஜெயித்து விட்டார். இவரை திருமணம் செய்து கொள்ள நீண்ட நாள் நண்பரான இவான் அல்மெய்டா விருப்பம் தெரிவித்துள்ளார். இதை லெரின் ஏற்றுக் கொண்டாராம். இவர் கை விரலில் நிச்சயதார்த்த மோதிரம் அணிந்திருந்தார். இதனால், விரைவில் திருமணம் செய்து கொள்வார் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

## அரச அதிபர் வெற்றிக் கிண்ண கால்பந்து

# 2ஆவது சுற்றில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட, அரச அதிபர் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் முதல் சுற்றில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலக அணி அபார வெற்றி பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட நலன்புரிச் சங்கத்தினால் பிரதேச செயலக பணியாளர்களுக்கிடையில் நடாத்தப்படும் அரச அதிபர் வெற்றிக் கிண்ண விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

அதில் ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் முதல் ஆட்டம் கடந்த 21ஆம் திகதி புதுக்குடியிருப்பு ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் துணுக்காய் பிரதேச செயலக பணியாளர்கள் அணியும், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகப் பணியாளர்கள் அணியும் முட்டி மோதிக் கொண்டன.

இப்போட்டியில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலக பணியாளர்கள் அணி ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தியது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் துணுக்காய் பிரதேச செயலக அணி முயன்றபோதிலும் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலக பணியாளர்கள் அணியின் சிறப்பான செயற்பாட்டின் அனைத்து முயற்சிகளும் முறியடிக்கப்பட்டன. இறுதியில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலக பணியாளர்கள் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. இப்போட்டித் தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் விரைவில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# திக்கம் இளைஞரின் கால்பந்து போட்டி

(அச்சுவேலி)

பருத்தித்துறை திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் அணிக்கு 11 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை விரைவில் நடாத்தவுள்ளது. பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடாத்தப்படவுள்ள இப்போட்டித் தொடரில் பங்குகொள்ள விரும்பும் அணிகளை அடுத்த மாதம் 22ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

இப்போட்டியில் வெற்றியீட்டும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனவும், ஆட்டநாயகன், தொடர் நாயகன் மற்றும் சிறந்த கோல் காப்பாளர் விருது உட்பட பல விருதுகளும் வழங்கப்படும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (85)

# நிர்வாகிகளுக்கான 4 நாள் செயலமர்வு

(கொழும்பு)

தேசிய ஒலிம்பிக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரண்டாவது விளையாட்டுத்துறை நிர்வாகிகளுக்கான நான்கு நாள் செயலமர்வு கொழும்பில் உள்ள ஒலிம்பிக் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்தச் செயலமர்வு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வுகளில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுத்துறை சார்ந்த நிர்வாகிகள் தங்களது விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு தேசிய ஒலிம்பிக் குழு கேட்டுக்கொண்டுள்ளது. விளையாட்டுத்துறை சங்கம் அல்லது அதன் கிளைச் சங்கத்தில் விளையாட்டுத்துறைசார் விடயங்களில் தீவிர ஈடுபாடு, கல்விப் பொதுத் தராதர உயர்தரத் தகைமை, ஆங்கில மொழி அறிவு, விளையாட்டுத் துறையில் பங்குபற்றியமை, தொழில்நுட்ப எழுத்தறிவு ஆகிய தகைமைகளைக் கொண்டிருப்பவர்கள் விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளனர். விண்ணப்பப் படிவங்கள் சகல விளையாட்டுத் துறைச் சங்கங்களுக்கும் நிறுவனங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தேசிய ஒலிம்பிக் குழு தெரிவிக்கின்றது.

இந்த செயலமர்வில் பங்குபற்ற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து விளையாட்டுத்துறை சங்கம் அல்லது நிறுவனத் தலைவர் அல்லது பணிப்பாளரின் முக புக் கடிதத்துடன் அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

விண்ணப்ப முடிவு செப்ரெம்பர் மாதம் 1ஆம் திகதியாகும். அதன் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என தேசிய ஒலிம்பிக் குழு அறிவித்துள்ளது.

விண்ணப்பங்கள் பரீட்சிக்கப்பட்டு நேர்காணலுக்கு தோற்றி அதில் தேர்ச்சி பெறுபவர்கள் செயலமர்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

# கொக்குவில் கே.சி.சி.சி.யின் கிரிக்கெட் தொடர்

(கொக்குவில்)

கொக்குவில் கே.சி.சி.சி விளையாட்டுக்கழகத்தினால் வருடா வருடம் நடாத்தப்படும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 30ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் அணிகளை எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறும், அன்றைய தினம் பிற்பகல் 4.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் அணி ஒழுங்கு தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அணி ஒழுங்கு தெரிவு செய்யப்படும்போது இப்போட்டித் தொடரில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் முக்கிய பதவி வகிக்கும் அங்கத்தவர் கட்டாயம் சமூகமளிக்க வேண்டும் எனவும், அணி வீரர்கள் விபரம் இன்றைய தினமே இணைக்கப்படவேண்டும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)

# வென்றது கரவெட்டி ஞானம்ஸ்

அரியாலை யூத் அணிக்கெதிரான மென்பந்து கிரிக்கெட் போட்டி ஒன்றில் கரவெட்டி ஞானம்ஸ் அணி அபார வெற்றிபெற்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் அரியாலை யூத் அணியும், கரவெட்டி ஞானம்ஸ் அணியும் மோதின. முதலில் ஆடிய ஞானம்ஸ் அணி 5 ஓவர்கள் நிறைவில் 55 ஓட்டங்களை பெற்றது. இதில் ஜொனி 18, சேந்திரன் 16, சுகந்தன் -11 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு 56 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அரியாலை யூத் அணி 4.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 36 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் முரளி 20, தினேஷ் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜொனி, சேந்திரன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.



ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்படும் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரில் கிண்ணம் வென்ற ஆவரங்கால் இந்து இளைஞர் அணியைக் காணலாம். யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் அச்சுவேலி கலைமகள் அணியை 3-2 என்ற செட் கணக்கில் வீழ்த்தியே ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (93,48)

# கால்பந்துப் போட்டியில் வெற்றியீட்டிய அணிகள்



(உரும்பிராய்)

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வடமாகாண பின்தங்கிய பாடசாலை வீரர்களின் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் வகையில் நடாத்திய கால்பந்தாட்ட சுற்றுப் போட்டித்தொடரின் அராலி ஜேம்ஸ், அராலி அண்ணா, குப்பிளான் விக்கினேஸ்வரா, கம்பர்மலை யங்கம் பன்ஸ் அணிகள் வெற்றிபெற்றன.

அணிக்கு 7 பேர் கொண்ட இந்தக் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி, உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இதில், அராலி ஜேம்ஸ் அணியும், புன்னாலைக் கட்டுவன் ஈவினை கலைமகள் அணியும் மோதின.

ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய அராலி ஜேம்ஸ் அணி 10:02 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் வடமராட்சி கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியும் உரும்பிராய் சென். மைக்கல் அணியும் மோதின. இதில் யங்கம் பன்ஸ் அணி 04:02 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.


மற்றுமொரு போட்டியில் அராலி அண்ணா அணியும் மாதகல் சென். தோமஸ் யுத் அணியும் மோதின. இதில் அண்ணா 03:02 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இறுதியாக நடைபெற்ற போட்டியில் குப்பிளான் விக்கினேஸ்வரா அணியும் அச்செழு வளர்மதி அணியும் மோதின. இதில் விக்கினேஸ்வரா அணி 03:02 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

# அமிர்தலிங்கம் படுகொலைக்கு பிறகு...

## 5

**1990** மார்ச் முடிவடைவதற்குள் இந்திய இராணுவம் அகன்றதும் விரைவிலேயே சூழ்நிலை உருமாற்றம் பெற்றது. ஜூன் 1990இல் அரச படையினருக்கும் எல்.ரீ.ரீ.ஈக் கும் இடையில் யுத்தம் வெடித்தது. நாடு இப்போது புலிகள்மீது, தீ மூச்சு விட்டு கந்தகத்



துகள்களை வாரியிறைத்து போராட தயாராக உள்ள ஒரு புதிய ரஞ்சன் விஜேரட்னவைப் பார்த்தது. "அடுத்த தடவை ஹில்ரன் அல்லது கலதாரி உபசரிப்புகள் ஒன்றும் கிடையாது. எல்.ரீ.ரீ.ஈக்கு சரஸ்வதி கபே சாப்பாடு மட்டும்தான்" என அவர் சிலேடையாகக் குறிப்பிட்டார்.

அமிர்தலிங்கம் கொலைக்கான பொறுப்பிலிருந்து எல்.ரீ.ரீ.ஈ யினை விடுவிக்க உண்மையை இருட்டடிப்பு செய்ய துணிவான முயற்சிகளை மேற்கொண்ட அந்த மனிதரே 1991 மார்ச் 2 இல் ஒரு கார் குண்டு மூலமாக எல்.ரீ.ரீ.ஈயினால் கொல்லப்பட்டார்.

அமிர்தலிங்கம் கொலைக்குப் பின்னர் ஏற்படக்கூடிய சாத்தியமான பின் விளைவுகளைப் பற்றி உணர்ந்திருந்த எல்.ரீ.ரீ.ஈ, அதனால்தான் வவுனியா பாண்டிக்குளத்தில் அமைதியான பேச்சுக்களை நடத்த வரும்படி அமிர்தலிங்கம் மற்றும் சிவசிதம்பரம் ஆகியோருக்கு யோகேஸ்வரன் மூலமாக அழைப்பு விடுத்தது.

ரி.யு.எல்.எப் உயர்மட்டம் இந்தப் பொறியில் அகப்பட்டு வவுனியா சென்றிருப்பார்களானால் அவர்கள் வெறுமே இந்தப் பூமியில் இருந்து காணாமற் போயிருப்பார்கள். "அமிர்தலிங்கத்துக்கு என்ன நடந்தது?" என்பது ஒரு சிக்கலான கேள்வியாக இருப்பதுடன் இந்த சதியினை புனைந்தவர்கள் மற்றவர்கள் பேரில் பழியினைப் போட்டு தங்கள் முயற்சியில் வெற்றி அடைந்திருப்பார்கள். சந்தேகப்பட நேர்ந்தாலும்கூட புலி-க்ளை தொடர்புபடுத்த வலுவான ஆதாரங்கள் இருக்கப் போவதில்லை.

எப்படியோ ரி.யு.எல்.எப் தலைவர்கள் வடக்குக்கு போக மறுத்தபடியால் இது நடக்காமல் போயிற்று. அதனால்தான் புலிகள் அவர்களை கொழும்பில் வைத்து கொல்ல வேண்டியதாகிவிட்டது.

அமிர்தலிங்கத்தையும் மற்றும் யோகேஸ்வரனையும் கொலை செய்த அந்த மூன்று கொலையாளிகளும் உயிருடன் தப்பியிருந்தால் அந்தக் கொலைப் பழியிலிருந்து எல்.ரீ.ரீ.ஈ விடுபட்டிருக்கும். அதன் பின்னர் பிரேமதாஸ அரசாங்கம் புலிகளின் தொடர்பை மறைப்பதற்கான ஒவ்வொரு ஆதாரத்தையும் பலவீனமாக்கியிருக்கும்.

அந்தப் பழி ஜனதா விமுக்தி பெரமுனவின் மீதோ அல்லது புதுதில்லியுடன் இணைந்திருக்கும் ஒரு தமிழ் குழுவின் மீதோ விழுந்திருக்கும். அந்த கொலைகளில் புலிகளைச் சிக்க வைக்கச் சதி செய்ததின் மூலம் அரசாங்கத்துக்கும் மற்றும் எல். ரீ.ரீ.ஈ க்கும் இடையில் நடக்கும் பேச்சுவார்த்தைகளை சீர் குலைக்க முயற்சிக்கப் பட்டதாக திறமையாக ஒரு வழக்கு சோடிக்கப் பட்டிருக்கும்.

கற்பனை செய்தபடி இந்தக் காட்சியை சித்தரிக்க முடியவில்லை ஏனென்றால் அந்த மூன்று புலிகளும் சுட்டுக் கொல்லப்பட்டு விசுவின் உண்மையான அடையாளம் வெளிக்கொணரப்பட்டது.

அமிர்தலிங்கம் வீட்டில் காவல் கடமையில் இருந்த நிசங்க திப்பொட்டுமுனுவ மற்றும் இரு காவலர்களும் கொலையாளிகளைத் தப்பியோட விடாமல் பார்த்துக் கொண்டார்கள். நிஸங்கவுடன் மற்ற இரண்டு காவலர்களும் கூட கொலையாளி-களைச் சுட்டுக் காயப்படுத்தினார்கள்..

உதவிப் பரிசோதகர் கந்தசாமி அலோசியசை சுட்டுக் காயப்படுத்தினார், காவலர் லக்ஸ்மன் விசு என்கிற அரவிந்தரத்தையும் மற்றும் அறிவு என்கிற சிவகுமாரையும் சுட்டுக் காயப்படுத்தினார். இந்த இரண்டு காவல்துறை உத்தியோகத்தர்களும் தமிழர்கள் என்பதால் அவர்கள் சுட்ட விபரங்கள் அப்போது பத்திரிகைகளில் வெளிவராமல் தவிர்க்கப் பட்டது எல்.ரீ.ரீ.ஈ யின் பழிவாங்கும் செயல்களிலிருந்து அவர்களது குடும்பத்தினர்களை பாதுகாக்கவேண்டும் என்பதற்காகவே. லக்ஸ்மன் இப்போது வட அமெரிக்காவில் வசிக்கிறார்.

விசு சுட்டு வீழ்த்தப்பட்டபொழுது அவரது கைகளுக்குள் ஒரு கையெறி குண்டு இறுகப் பிடித்தபடி இருந்தது.

அமிர்தலிங்கத்தின் வீட்டில் பாதுகாப்பு கடமையில் இருந்த மற்றொரு பாதுகாப்பு உத்தியோகத்தர் அன்று விடுமுறை எடுத்திருந்தார். சில்வா என்கிற

**- டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையிலிருந்து.**

அவர் தனது துப்பாக்கியை நிஸங்க வசம் ஒப்படைத்திருந்தார். இந்த இரண்டாவது துப்பாக்கியை தன்வசம் வைத்திருந்தபடியால்தான் நிஸங்கவால் விசுவை வீழ்த்த முடிந்தது.

நிஸங்க மற்றும் சில்வா ஆகிய இருவரும் மகாவலி பாதுகாப்பு பிரிவைச் சோந்தவர்கள் அவர்கள் நம்பிக்கை பொறுப்பு மிக்கவர்கள் என்பதனால்தான் அமிர்தலிங்கத்தின் பாதுகாப்புக்காக காமினி திசாநாயக்கா அவர்களை தனிப்பட்ட முறையில் ஏற்பாடு செய்திருந்தார்.

பல வருடங்களுக்கு முன்பே கொலை நடந்தபோது ரி.யு.எல்.எப் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் அமிர்தலிங்கத்தின் கொலை பற்றிய உண்மை வெளிப்பட்டிருக்கும். அதைக் கண்ணால் பார்த்த ஒரே சாட்சியான மு.சிவசிதம்பரம் வெளிப்படையாக எதுவும் கூறாமல் அந்த விடயத்தில் பேரமைதியை பேணி வந்தார்.

என்ன நடந்தது என்பதில் தெரிவு செய்யப்பட்ட சிலவற்றை சிவசிதம்பரம் தனிப்பட்ட முறையில், ஒரு தொலைபேசி உரையாடல் மூலமாக துல்லியமாக என்ன நடந்தது என்பதை என்னிடம் தெரிவித்திருந்தார். அவரது நினைவாற்றலைப் பற்றி நான் குறிப்பிட்டபோது, "அன்றைய தினம் நடந்ததை என்னால் எப்பொழுதாவது மறக்கமுடியுமா தம்பி" என சிவசிதம்பரம் என்னிடம் கேட்டார். இது அந்தச் சம்பவம் நடந்த பல வருடங்களின் பின் இடம்பெற்றது.

எனினும் அப்போது அவர் சொன்னவற்றை வெளிப்படுத்தாமல் இருக்க வேண்டும் என சிவா என்னிடம் ஒரு உறுதிமொழியையும் பெற விரும்பினார். மேலும் நான் திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் மற்றும் திருமதி. சரோஜினி யோகேஸ்வரன் ஆகியோரிடத்தும் அந்தச் சம்பவம் பற்றிய அவர்களது நினைவுகளையும் கேட்டுத் தெரிந்து கொண்டேன்.

இப்போது அந்தச் சம்பவம் நடந்து 25 வருடங்களின் பின்னர் அந்தக் கொலைகளைப் பற்றியும் அதன் பின்னர் நடந்தவற்றைப் பற்றியும் தெளிவாக என்னால் எழுத முடிந்துள்ளது.

# கிழக்குப் பல்கலை. நுண்கலைத்துறையினர் நடாத்திய பாரம்பரிய அரங்க விழா - 2014

**பா**ரம்பரியக் கலைகளின் சமகாலத் தேவைகளையும் முக்கியத்துவத்தினையும் அறிந்து கொள்ளும் வகையில் அரங்கக் கலைஞர்களுடனும் சமூகங்களுடனும் இணைந்த வகையில் முன்னெடுக்கப் பட்டு வருகின்ற கல்விச் செயற்பாடுகளில் பாரம்பரிய அரங்க விழா நான்காவது வருடமாக இம்முறையும் மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயதிருவிழா முற்றத்தில் நான்கு நாட்களாக (21.07.2014 - 24.07.2014) இரவு பகலாக வெகு சிறப்பாக நடைபெற்று முடிந்தது.

அறிமுக உரையினைக் கலாநிதி சி. ஜெயசங்கர் வழங்கியிருந்தார். தலைமை உரையினைக் கலாநிதி வ. இன்பமோகன், பிரதம விருந்தினர் உரையினை கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி கி. கோவிந்தராஜா அவர்களும் வழங்கியிருந்தனர். சிறப்பு விருந்தினர் உரைகளை கலாநிதி க. இராஜேந்திரம், ம. அரசரெட்ணம் (வண்ணக்கர் மாமாங்கேஸ்வரர் ஆலயம்) ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து "கூத்து ஆளுமைகளை மாண்பு செய்தல்" சிறப்பு நிகழ்ச்சி இடம்பெற்றது. இதில் புலவர் கி. அருளம்பலம் (மூத்த கூத்துக் கலைஞர், கூத்துப் பனுவல் எழுத்தாளர்), க. கிருஷ்ணர் (தப்பு வாத்தியக் கலைஞர்), க. சண்முகம் (வேடுவர் சடங்கு), இளம் கூத்துக் கலைஞரும், கூத்துப் பனுவல் எழுத்தாளர்களுமான கேதீஸ்வரன், கி. புவிக்குமார் மற்றும் கி. குலராஜ் (பாரம்பரிய ஓவியர்), செ. சிவநாயகம் (மீளுருவாக்கக் கூத்துப் பனுவல் எழுத்தாளர்) ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

"தப்பு" வாத்திய இசை முழக்கத்துடன் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தரினால் "பாரம்பரிய அரங்கக் காட்சிக்கூடம்" திறந்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து கலைஞர்கள் க. தர்மராசா, மோ. மேகன்ராஜ் ஆகி-யோரின் "பறை முழக்கம்" களரியிலே நிகழ்த்தப்பட்டது. ஆரம்பகாலங்களிலே பறை மேளம் எமது பாரம்பரியமான வாத்தியமாகக் கருதப்பட்டு தமிழ் மக்களின் வாழ்வியல் அம்சங்களுடன் இணைந்ததாகக் காணப்பட்டது.



குறிப்பாக ஆலயங்களிலே பறை மேளம் முக்கிய இடத்தினைப் பெற்றிருந்தது. ஆனால் தற்காலங்களில் இவ்வாத்தியத்தினை அமங்கலத்திற்குரிய பொருளாகக் கருதி ஒதுக்குகின்ற மனநிலைக்கு மக்கள் மாறிவிட்டார்கள். எமது பாரம்பரியத்தைத் தக்கவைக்கின்ற நோக்கிலே இந்நிகழ்வானது இடம்பெற்றிருந்தது.

இதைத் தொடர்ந்து களரியிலே நாவற்குடா கிராமத்தில் வாழும் அருந்ததியர் சமூகத்தினைச் சேர்ந்த கலைஞர் க. கிருஷ்ணன் மற்றும் அவரது சகோதரன் க. நாராயணன் ஆகியோரால் தப்பு வாத்தியம் இசைக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் திரு. சு. சந்திரகுமார் அவர்களினால் தொகுத்தளிக்கப்பட்ட காலை நேர நிகழ்வானது கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையின், உதவி விரிவுரையாளர் திருமதி ஜெ. நிலுஜா அவர்களின் நன்றியுரையுடன் நிறைவுபெற்றது.

மாலை, முனைக்காடு நாகசக்தி மன்றத்தினரின் வடமோடிக் கூத்தான "பவளக்கொடி நாடகம்" முழுநேர இரவுக் கூத்தாகக் களரி[illegible]ற்றப்பட்டது.

இரண்டாம் நாள் நிகழ்வுகளில், "கூத்தரங்கின் எழுத்துப் பனுவல்களை ஆக்கும் புலவர்களின் சந்திப்பு" இடம்பெற்றிருந்தது. இதில் புலவர் கி. அருளம்பலம் (பருத்திச்சேனை), புலவர் செ. சிவநாயகம்

# சினிமா சினிமா

• இரண்டு வருடங்களுக்கு முன் தொடங்கப் பட்ட ஷங்கரின் "ஐ" படத்தில் விக்ரம் ஏற்கும் கதாபாத்திரம் என்னவென்பது இன்னமும் ரகசியமாகவே வைக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் படத்தின் "டீஸரை" வெளியிட்ட ஷங்கர், "எங்களது இரண்டு வருட உழைப்பின் ஒரு நிமிடம் இது" என்று திரையிட்டுக் காட்டியிருக்கிறார்.

• வடிவேலு நடித்த தெனாலிராமன் பெரிய வரவேற்புப் பெறவில்லை. இருந்தாலும் அப்படத்தின் இயக்குநரான யுவராஜ் தயாளன் படத்திலேயே மீண்டும் நடிக்கிறார் வடிவேலு.

• "வடகறி படத்தில், நான்கு நிமிட நடனத்துக்கு, ஒரு கோடி ரூபாய் வாங்கினேன்..." என, பெருமைப்படுகிறார் நடிகை சன்னி லியோன். கனடாவில் புளூ பிலிம்களில் நடித்து கிடைத்த வருமானத்தை விட அதிகமாக, இந்தியப் படங்களில் தலைகாட்டும் போது கிடைக்கிறது..." என்கிறார்.







இவரை தமிழில் நாயகியாக்கி ஒரு கலக்கு கலக்க, பல தயாரிப்பாளர்கள் தயார்நிலையில் உள்ளனர். கனடாவில் பிறந்து வளர்ந்த இந்த பஞ்சாபி பெண், விரைவில் தமிழ் பெண்ணாக, திரையில் தோன்ற இருக்கிறார்.

• இயக்குநர் பாசிலின் மகனும் மலையாளத்தில் வளர்ந்துவரும் பிரபல நடிகருமான பஹத் மற்றும் நடிகை நஸ்ரியா ஆகியோரின் திருமணம் கடந்த வியாழக்கிழமை திருவனந்தபுரத்தில் நடந்தது.

• பொல்லாதவன் படத்தில் அறிமுகமாகி ஆடுகளம், மூடர்கூடம் போன்ற படங்களில் துணைநடிகராகப் பிரபலம் ஆன சென்ராயனுக்கு வரும் 31ஆம் திகதி திருமணம் நடக்கவிருக்கிறது. காதலித்து வந்த பட்டதாரிப் பெண்ணான கயல்விழியையே கரம்பிடிக்கிறார்.

• எப்படியாவது ஒரு படத்தில் விஜய்யுடன் இணைந்து நடித்துவிட வேண்டும் என்று ஹன்சிகா எடுத்த முயற்சி, தோல்வியடைந்து விட்டது. அந்த வாய்ப்பை ஸ்ருதி ஹாசன் தட்டிப்பறித்து விட்டார். அதேபோல், இன்னொரு படத்திலும், இவருக்குப் பதிலாக எமி ஜாக்ஸன் புகுந்து விட்டார். மேற்படி படங்களின் கதாநாயகர்களே, அவர்கள் பக்கம் சாய்ந்து, இவரை ஓரங்கட்டி விட்டனர். அதனால், தன் மீதான ஈர்ப்பு கோலிவுட் கதாநாயகர்களுக்கு குறைந்து விட்டதன் காரணம் என்ன என்று தெரியாமல், கவலையில் உறைந்து போயிருக்கிறார் ஹன்சிகா.

• தான் இயக்கும் படங்களில் நடிப்பதில்லை என்ற கொள்கையை கடைப்பிடித்து வருகிறார், நடிகை ஸ்ரீப்ரியா.


• வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் படத்தில் கதாநாயகனாக நடித்த பின், சந்தானம், இனி முன்பை விட அதிக சம்பளம் கேட்பார் என்று, தயாரிப்பாளர்கள் தயங்குகின்றனர். பதிலாக, பரோட்டா சூரியை ஒப்பந்தம் செய்து வருகின்றனர். தற்போது சூரியின் கையில், பன்னிரண்டு படங்களும், சந்தானத்தின் கையில் நான்கு படங்கள் மட்டுமே உள்ளன.

• மலையாள நடிகர் திலீப்பை விவகாரத்து செய்யும் நடிகை மஞ்சுவாரியார், தன் பெயரில் அவர் எழுதி வைத்திருந்த, 80 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகளை அவரிடமே திரும்ப ஒப்படைத்திருக்கிறார்.

• நண்பேன்டா படப்பிடிப்பிற்கு, நயன்தாரா தாமதமாக வந்தாலும், அவருக்காக காத்திருந்து படப்பிடிப்பு நடத்துகிறார் உதயநிதி.

• சின்னத்திரையில், நிகழ்ச்சித் தொகுப்பாளராக இருந்தவர் ஜேம்ஸ் வசந்தன். பின், சுப்பிரமணியபுரம் படம் மூலம் இசையமைப்பாளராக சினிமாவுக்குள் வந்தவர். தொடர்ந்து இசையமைத்து வரும் அவர் தற்போது, இயக்குநராகியிருக்கிறார். படத்தின் பெயர் "வானவில் வாழ்க்கை".

• கோலிவுட்டில் தொடங்கிய இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானின் இசைப் பயணம், பொலிவுட் தாண்டி ஹொலிவுட் வரையிலும் பரவியது. தற்போது ஈரான் படத்துக்கு இசையமைக்கிறார். Children of heaven, The color of paradise, The song of sparrows போன்ற படங்களுக்கு உலகின் பெருவாரியான விருதுகளைப் பெற்று புகழின் உச்சத்தில் இருக்கும் ஈரானிய இயக்குநர் மஜித் மஜிதி-யின் படம். முழுக்கவே பாடல்கள் இல்லாமல் ஒரு படத்தில் இசையமைப்பது இதுதான் முதல் முறை என தெரிவித்துள்ளார் ஏ.ஆர்.ரஹ்மான்.



## பல் இருக்கும் – புற்றுநோய் வரும்

நம் பற்களைப் பாதுகாக்கவே தினம் தோறும் பாடுபடும் பற்பசை நிறுவனங்கள் தொலைக் காட்சிகளின் திரையை நாளில் ஏராளமான நிமிடங்கள் ஆக்கிரமிக்கின்றன. விளம்பரங்கள் அந்த நிறுவனத்துப் பற்பசை ஒரு நாளும் நோய்வாய்ப்படாத பற்களை, ஈறுகளை மக்களுக்குக் கொடுக்கும் என்று நம்மை மூளைச் சலவை செய்கின்றன.

இதற்கு வெள்ளைக் கோட் ஒன்றை அணிந்த மழமழா சவரத்துடன் சிரித்த முகமும், கனிவே சொல்லாகக் கொட்டும் மனிதரின் குரலோடும் தோன்றும் ஒரு விளம்பர நாயகர் டாக்டராக நடித்து நம் பற்களை எப்படி கிருமிகளிடம் இருந்து, துர்நாற்றத்திலிருந்து காப்பாற்றி, நம்மை ஆட்கொள்ளவே தோன்றியது இந்தப் பற்பசை என்று நம்மை நம்ப வைக்க முயல்கிறார். பதினைந்து நிமிடத்திற்கொருமுறை இந்த முயற்சி நடக்கிறது.

அத்தகைய உன்னத பற்பசையில் என்னதான் இருக்கிறது? ஆளைக் கொல்லும் புற்று நோயை நமக்குள் தூண்டக்கூடிய ஒரு இரசாயனப் பொருள்- இதுதான் வாயில் கிருமிகளைக் கொல்லும் என்று நமக்குச் சொல்கிறார்கள். ட்ரைக்ளோஸான் என்கிற இந்த இரசாயனப் பொருள் புற்று நோயைக் கொணரும் வாய்ப்பு அதிகமுள்ளது என்றும், மலட்டுத் தன்மையையும் கொணரும் என்றும் தற்போது அமெரிக்கப் பத்திரிகைகள் சொல்லத் தொடங்கியுள்ளன.

இது அமெரிக்க நிறுவனங்களிடையே நடக்கும் வியாபாரப் போரால் வெளிவரும் செய்தியாகவும் இருக்கலாம். ஆனால் நாம் பயப்படாமல் இருக்க முடியாது. இது உண்மையாயிருக்கும் பட்சத்தில் இந்த வகைப் பற்பசைகளை விற்க அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது என்றுதான் நமக்குத் தோன்றும். ஆனால் பழையபடி நாம் ஆலங்குச்சி வேப்பங்குச்சிகளுக்குத் திரும்புவதும் இனி சாத்தியமில்லை. எனவே, "இது ட்[illegible]க்ளோஸான் இல்லாத பற்பசை" என்ற விளம்பரங்களுக்குக் காத்திருக்க வேண்டியதுதான்!

(சீலாமுனை), எழுத்தாளர் மா. கேதீஸ்வரன் (முனைக்காடு), எழுத்தாளர் க. புவிக்குமார் (கன்னங்குடா) ஆகியோர்கள் பங்குபற்றித் தங்களது கூத்துப் பனுவல் எழுதிய அனுபவம், கூத்துப் பனுவல் எழுத இருக்கவேண்டிய தகைமைகள், ஆளுமைகள் போன்றவை பற்றிக் கலந்துரையாடினர். இதனைக் கலாநிதி சி. ஜெயசங்கர் தலைமை தாங்கி நடத்தினார்.

மாலை நிகழ்வில், வந்தாறுமூலைக் கிராமத்தினைச் சேர்ந்த புலிக்கூத்துக் கலைஞர்களின் "புலிக்கூத்து ஆற்றுகையும் கலந்துரையாடலும்" இடம்பெற்றது. இக் கூத்தின் கதைக் கருவானது வேடுவர்கள் காட்டிற்குள் சென்று வேட்டையாடித் தேன் எடுப்பதனை மையமமாகக் கொண்டுள்ளது. எனவே தொன்மையான இக்கலையினை வெளியுலகிற்குத் தெரியப்படுத்தும் நோக்கிலும், புலிக்கூத்துக் கலைஞர்களைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாகவும் இந்த நிகழ்ச்சி இடம்பெற்றது.

பின்னர் "மங்கியூர் மகிமை" தென்மோடிக் கூத்து பருத்திச்சேனைக் கிராம கூத்துக் கலைஞர்களால் முழு நேரக் கூத்தாகக் களரியேற்றப்பட்டது.

மூன்றாம் நாள் நிகழ்வுகளில், "சமகால கூத்தரங்க இயக்கப் பின்புலத்தில் செம்மையாக்கம், நவீனவாக்கம், மீளுருவாக்கம்" என்ற எண்ணக்கருக்கள் பற்றிய கலந்துரையாடல் இடம்பெற்றது. கூத்து மீளுருவாக்க அனுபவம் பற்றி செ. சிவநாயகம் அவர்கள் தனது அனுபவங்களையும், கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டார்.

மாலை நிகழ்வில், "வேடுவர் சடங்கு" நிகழ்த்திக் காட்டப்பட்டது. இச்சடங்கிலே பறைக்காரர் கொட்டு வாசிக்க, வேடுவ மொழிப் பாடல் பாட, கபுறாளா எனும் தெய்வக்காரர் தலையில் சீலை கட்டி தென்னங்குருத்தினால் சட்டை அணிந்து வில், அம்பு, ஈட்டி, சட்டம் முதலிய ஆயுதங்களை எடுத்து ஆடுவார். இவர்களின் வழிபாட்டில் மூதாதையர் வழிபாடு முதன்மைப்படுத்தப்பட்டு ஏனைய தெய்வங்கள் வரவழைக்கப்படும். கரடித் தெய்வம், மாறாத் தெய்வம் முதலியன முக்கிய தெய்வங்களாகும்.

தொடர்ந்து சொர்வாமுனை வேல்விழி கலைக் கழகத்தினரால் "அல்லி அர்ச்சுனா" வடமோடிக் கூத்து ஆற்றுகை செய்யப்பட்டது.

இறுதி நாள் நிகழ்வில், "இசைக் கருவிகள் உருவாக்குதல், இணக்குதல் தொடர்பான தொழில் முனைவோர் சந்திப்பும், கூட்டுருவாக்க முன்னெடுப்பும்" எனும் தொனிப்பொருளின் கீழ் உரையாடல் நடந்தது.

மாலை, "அருச்சுனன் தவநிலை" வடமோடிக் கூத்து நாவலடிக் கூத்துக் கலைஞர்களால் களரியேற்றப்பட்டது. எமது பாரம்பரியக் கூத்துக்களிலே பெண் பாத்திரங்களை ஆண்களே பாத்திரமேற்று நடித்து வருகின்ற நிலையில் இக்கூத்தில் பெண் பாத்திரங்களுக்கு பெண்களே ஆடியமை சிறப்பம்சமாகக் காணப்பட்டது.

இன்றைய நவீன அறிவுப் புலத்தில் மனிதர் தம்மை மறந்து அல்லது தேவை கருதி இயந்திரமாக மாறி வாழ்க்கையினை ஓட்டிச் செல்லும் காலத்திலே இவ்விழா கிழக்குப் பல்கலைக் கழக நுண்கலைத்துறையினரால் பரந்த சூழலில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையானது முக்கியமான விடயமே.


இணைய வலைத்தளங்களும், தொலைக்காட்சிப் பெட்டியுமே உலகம் என்று நம்பித் தங்களையே மறந்து மூழ்கித் தடுமாறும் இன்றைய தலைமுறையினருக்கு எமது பாரம்பரியங்களையும், அதன் ஆற்றுகை வடிவங்களையும் பார்வையிடுகின்ற, அறிந்து கொள்கின்ற சந்தர்ப்பத்தை இவ்விழா வழங்கியது. சிறுவர், இளைஞர், முதியோர் என்கின்ற வேறுபாடின்றி விடிய விடிய கூத்துக்களைப் பார்த்துச் சென்றனர்.

பாரம்பாரிய அரங்க விழாவானது நுண்கலைத்துறையினரால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதற்கான காரணம் எமது பாரம்பரிய அரங்கின் யதார்த்த நிலையை, கிராமிய மக்களுக்குப் பரிச்சயமான விடயத்தை நகரமயப்பட்ட பகுதியில் வாழும் மக்களுக்கும் அறிமுகப் படுத்துவது எனும் நோக்கிலேயாகும். அழகியல் என்பது பன்மைத் தன்மையானது. உயர்ந்தவை, தாழ்ந்தவை எனும் பார்வை கலைகளுக்கு உரியவையன்று என்கின்ற நிலமையினை மக்கள் விளங்கிக் கொள்ளும் வண்ணம் இங்கு பலதரப்பட்ட வாத்தியங்களின் இசை நிகழ்ச்சிகளும், பாரம்பரிய அரங்க ஆற்றுகைகளும் களரியிலே நிகழ்த்தப்பட்டன.

பாரம்பரியமான முறையில் வட்டக்களரியில் ஆற்றுகை செய்யப்படும் கூத்தானது இன்று பாடசாலைகளில் படச்சட்ட மேடைகளிலே ஆடுவதற்குக் கற்பிக்கின்றனர். இது ஏற்றுக்கொள்ள முடியாத செயலாகும். இது பற்றி ஏற்கனவே சுட்டிக் காட்டியிருந்தும் அரங்க விழா நடைபெற்ற வேளை அண்மையிலுள்ள பாடசாலைகள் கூட தங்களது மாணவர்களை அழைத்துவந்து வட்டக்களரியில் பாரம்பரியமாக ஆற்றுகை செய்வதனை நேரடியாகக் காட்டிக் கற்பிக்கத் தவறிவிட்டனர். இவ்வாறான சந்தர்ப்பங்களைத் தவற விட்டுவிட்டு செயன்முறைக் கல்வியை மாணவர்களுக்கு எவ்வாறு வழங்குவது என்பது கேள்விக்குறியே.

கல்வி என்பது செயன்முறையாகவும், சமுதாயமயப்பட்டதாகவும், நடைமுறை வாழ்க்கையை எதிர்கொள்வதாகவும் அமையும் கல்வி முறையாகப் பாரம்பரிய அரங்க விழா வடிவமைக்கப்பட்டு முன்னெடுக்கப்படுகிறது.

**தி. துலக்சனா**
**கிழக்குப் பல்கலைக் கழகம்,**
**நுண்கலைத் துறை.**










நல்லூரில் அமைந்துள்ள யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு நடைபெற்றுவரும் நோயற்றவாழ்வு என்னும் தொனிப் பொருளிலான கண்காட்சி நேற்று முன்தினம் நடைபெற்றபோது... (பா)



# நிகழ்வுகளின் பதிவுகள்....

யாழ். ஈ.சிற்றி ஆங்கில கல்லூரியின் பட்டமளிப்பு விழா யாழ். ரில்கோ விருந்தினர் விடுதியில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினிதேவி இளங்கோவன் மங்கள விளக்கேற்றுவதையும் கல்லூரி தலைவர் லயன் ஜெ.றஜீவன் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண மீன்பிடித்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன் மாணவி ஒருவருக்கு பதக்கம் அணிவிப்பதையும் காணலாம்.

வடமாகாண பண்பாட்டு அலுவலகத்தின் அனுசரணையில் பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலகத்திற்குட்பட்ட கலைஞர்களின் விபரங்கள் உள்ளடங்கிய கலைஞர் விபரத்திரட்டு நூல் வெளியீட்டுவிழா அண்மையில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் நூலை வெளியிட்டு வைப்பதைக் காணலாம். (37)




கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவி[illegible] ...றுவர் கழக உறுப் பினர்களுக்கு ம[illegible]நாள் விழிப்பு[illegible] [illegible]0)



நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு வீதி நாடகம் அண்மையில் நெல்லியடி பஸ் நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்றபோது.... (18)

# சரும நோய் தொடர்பாக மருத்துவ ஆலோசனை அவசியம்

## பொதுமக்களுக்கு அறிவுறுத்து

ஒவ்வாமைத் தன்மை கொண்டவர்கள், அழகு சாதன நிலையங்களுக்கு செல்வதற்கு முன்னர், கட்டாயமாக மருத்துவ ஆலோசனை பெற்றுக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தலை சரும நோய் தொடர்பான விஷேட மருத்துவர்கள் சங்கத் தலைவர் புஸ்பா கருணாசேகர விடுத்துள்ளார்.

களி வகை அலங்கார முக பூச்சுக்களை பயன் படுத்திய பின்னர், சிலருக்கு ஒவ்வாமை நோய் ஏற்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில், உரிய மருத்து வர்களை சந்திக்குமாறும் அவர் மக்களிடம் கோரி யுள்ளார்.

டபிள்யூ.டபிள்யூ.டபிள்யூ.எஸ் எல் சீ டீ டொட் எல் கே (www.slcd.lk ) என்ற இணையத்தளத் தின் ஊடாக உரிய சரும நோய் தொடர்பான விஷேட மருத்துவர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என சரும நோய் தொடர்பான விஷேட மருத்துவர்கள் சங்கத் தலை வர் புஸ்பா கருணாசேகர தெரிவித்துள்ளார்.

# சாவகச்சேரி வைத்தியசாலையில் பார்வையாளர் மண்டபம் திறப்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் புதி தாக அமைக்கப்பட்ட பார்வையாளர் மண்டபம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. வைத் தியசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் யோ.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பார்வையாளர் மண்டபத்தை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் வைத்திய கலாநிதி ஆர்.கேதீஸ்வரன் நாடா வெட டித் திறந்து வைத்ததுடன் பெயர்ப்பலகையையும் திரை நீக்கம் செய்து வைத்தார். இந்த நிகழ்வில் வைத்திய சாலை பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ரி.சிறீகரன், வைத்திய கலா நிதி ச.அம்பிகைபாகன், சாவ கச்சேரி நகரசபைத் தவி சாளர் இ.தேவசகாயம்பிள்ளை, இளைப்பாறிய அதிபர் முநாகேந திரராஜா உட்பட பலர் கலந்துகொண்டனர். சாவ கச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த அமரர்களான வ.பொன்னுச்சாமி, திருமதி வ.பொன்னுச்சாமி, திருமதி இ.உருத்திரன் ஆகியோரின் நினைவாக இவர்களது குடும்பத்தினரால் இந்த மண்டபம் அமைத்து வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆபாசப்படம் காண்பித்த ஆசிரியருக்கு அரச நிதி செலுத்த உத்தரவு

ஆபாசப் படங்களை வைத்திருந்து அதனை மாணவர்களுக்குக் காண்பித்த ஆசிரியரை அரச [illegible]திக்கு ஒரு இலட்சம் ரூபாய் செலுத்துமாறு சாவ கச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் ஸ்ரீநிதி நந்த சேகரம், நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவ தாவது,


மேற்படி ஆசிரியர், கொடிகாமம் நகர்ப் பகுதி யிலுள்ள தனியார் கல்வி நிலையத்தில் கல்வி கற்பிக்கின்றார்.

இந்நிலையில், மேற்படி ஆசிரியர் தன்னிடம் கல்வி கற்கும் மாணவர்களிடம் பணம் வாங்கிக் கொண்டு, தொலைபேசியில் வைத்திருந்த ஆபா சப்படங்களைக் காண்பித்து வந்துள்ளார்.

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்படி ஆசிரியரைக் கடந்த வியாழக்கிழமை மாலை பொலிஸார் கைது செய்தனர்.

சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆஜர்ப்படுத்திய போது, அவரைக கடுமையாக எச்சரிக்கை செய்த நீதவான், ஒரு இலட் சத்தை அரச நிதியாகச் செலுத்துமாறும் உத்தர விட்டார். (25)

# மண்டைதீவு பிரதான வீதிக்கு காப்பெற் இடும் பணி ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு பிரதான வீதிக்கு காப்பெற் இடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வழிப்பிள்ளையார் கோவிலில் இருந்து மண் டைதீவுக்குச் செல்லும் வீதியை நோக்கிய வீதி புனரமைப்புப்பணிகளில் நிறைவுபெற்ற பகுதியே காப்பெற் வீதியாக நிர்மானிணிக்கப்பட்டுவரு கின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் இந்தப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. தற்போது பெய்துவரும் மழைகாரணமாக இந்தப்பணிகளில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது. எனினும் மழை காலத திற்கு முன்னதாக இந்த வீதியின் நிர்மாணப் பணிகளை முடிவுறுத்தும் வகையில் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப் படுகின்றது. மேலும் இந்த வீதியின் பெரிய பாலமாகிய ஏழுகண்பாலம் தற்சமயம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவருகின்றது. (பா, 51)

# தொழில்வாய்ப்பும் பரீட்சைகளும்

## தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் பூங்காக்களுக்கு ஆரம்பநிலை பகுதியளவில் தேர்ச்சி பெற்ற சேவை வகையைச் சார்ந்த -

- சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் **(Bungalow keeper)**
- மேசன் **(Mason)**
- தச்சன் **(Carpenter)**
- மோட்டார் வாகன தொழில்நுட்பவியலாளர் **(Motor mechanic)**
- மின்சாரத் தொழில்நுட்பவியலாளர் **(Electrician)**
- ஒட்டுநர் **(Budder)**
- லேபல் இடுபவர் **(Label writer)**

ஆகிய பதவிகளுக்காக தகுதிவாய்ந்த இலங்கைப் பிரஜைக ளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

அத்துடன் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் (NVG) இரண டில் அல்லது அதற்குச் சமமான தகைமை பெற்றிருத்தலுடன் எழுத்து மூலமான சான்றிதழ்களால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதுக்கு குறையாதவர் களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண் டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை 'பணிப்பாளர் நாயகம், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம், த.பெ. இல.14, பேராதனை' என்ற முகவரிக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடு தல் வேண்டும்.

## விஞ்ஞான பட்டதாரிகள், டிப்ளோமாதாரிகளை ஆசிரிய சேவைக்கு ஆட்சேர்த்தல்

க.பொ.த. உயர்தர புதிய தொழில்நுட்பவியல் பாடத்திட் டத்தின் கீழ் நாட்டின் பிள்ளைகளது அறிவினை மேலோங்கச் செய்யும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள மகிந்தோதய விஞ்ஞான கூடங்களைக் கொண்ட இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்ப வியலுக்கான விஞ்ஞானம் எனும் பாடங்களுக்காக காணப்படும் சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல ஆசிரிய வெற்றிடங்களுக்காக

ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் இலங்கை ஆசிரிய சேவையின் தரம் 3-I இற்கு ஆசிரியர்களை ஆட்சேர்க் கும் பொருட்டு தகைமையுள்ள பட்டதாரிகளிடமிருந்தும்

அத்துடன்

பொறியியற் தொழில்நுட்பவியல்பாடத்தினைக் கற்பிப்பதற் காகக் காணப்படும் சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல ஆசிரிய வெற்றிடங்களுக்காக ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் இலங்கை ஆசிரிய சேவையின் தரம் 3-I இற்கு ஆசி ரியர்களை ஆட்சேர்க்கும் பொருட்டு தகைமையுள்ள இயந்திரவி யற் தொழில்நுட்பம், கட்டுமானத் தொழில்நுட்பம், மின்னியல் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம் தொடர்பிலான டிப்ளோமா தாரர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதியாகும். வெற்றிடங்கள் உள்ள பாடசாலைகளின் பெயர் மற்றும் மேலதிக விபரங்களை கடந்த 15.08.2014 ஆம் திகதி வெளியாகிய அரச வர்த்தமானியில் பார்வையிட்டுக் கொள்ள முடியும்.

## கணக்காய்வு அத்தியட்சகர்கள் (மட்டுப்படுத்தப்பட்ட/திறந்த)

இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு II தரம் II இற்கு கணக்காய்வு அத்தியட்சகர்களை (Superintendents of Audit) ஆட்சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட/திறந்த போட் டிப் பரீட்சைக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக் களத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங் களை 'கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம், இல.306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை என்ற முகவரிக்கும், திறந்த பரீட்சார்த்திகள் 'பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தாபனங்கள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங் கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல.1503, கொழும்பு என் னும் முகவரிக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திக திக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலை யில் திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை கணக்காய்வு அத்தியட்சகர்-2014' என்று எழுதப்படல் வேண்டும்.

இதற்கான மேலதிக விபரங்களை கடந்த 15.08.2014 ஆம் திகதி வெளியாகிய அரச வர்த்தமானியல் பார்வையிட்டுக் கொள்ள முடியும்.

தொகுப்பு:-
சி.என்.எச். சாள்ஸ்

# வடக்கு மாகாண இ.போ.ச.சாலைகளின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சந்திப்பு




(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், கோண்டாவில், பருத்தித்துறை, காரைநகர் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் இலங்கை போக்குவரத்துச் சபை சாலைகளின் ஜனநாயக ஊழியர் சங்க தலைவர்கள், செயலாளர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அமைச்சரது யாழ்.அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இவர்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஜனநாயக ஊழியர் சங்கத்தின் போஷகராகவும், ஆலோசகராகவும் தான் செயற்படுகின்ற போதிலும் சங்கத்தினரின் நியாயமான செயற்பாடுகளுக்கு மாத்திரமே பூரண ஒத்துழைப்பு வழங்குவேன். தென்னிலங்கையில் வெவ்வேறு அரசியல் கட்சிகள் தத்தமது தொழிற்சங்கங்களைக் கொண்டிருக்கின்ற நிலையில் அச்சங்கங்கள் தம் கட்சி நலன் சார்ந்த செயற்பாடுகளை மாத்திரமே முன்னெடுக்கின்றன.

அந்த நிலைப்பாட்டை இத் தொழிற்சங்கத்தினுள் நுழைக்க நான் விரும்பவில்லை. கட்சிசார்பற்ற வகையில் இதன் செயற்பாடுகள் பரந்துபட்டதாக அமைதல் வேண் டும். முக்கியமாக, இத்தொழிற்சங்கமானது தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்து மேம்படுத்த வேண்டும். பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்க வேண்டும். அதேபோன்று நிறுவனத்திற்கு விசுவாசமாக செயற்பட வேண்டும் என்றார். இந்நிகழ்வில் பிராந்திய பொதுமுகாமையாளர் அஸ்ஹர், யாழ்.சாலை முகாமையாளர் குலபாலசெல்வம் உட்பட சாலைகளின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# அரியாலை கிழக்கு பகுதி மக்களுடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், அரியாலை கிழக்குப் பகுதியைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடினர்.

அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது அம்மக்கள் கால்நடைகள் வளர்ப்பில் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் பிரதான வீதி புனரமைப்பு, கடற்றொழில் சார்ந்த உதவிகள், காணித் தேவைகள் தொடர்பில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இம்மக்களது கோரிக்கைகள் தொடர்பில் அவதானஞ் செலுத்திய அமைச்சர் அப்பகுதிக்கு மீண்டும் வருகை தந்து கோரிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து தீர்வுகளைப் பெற்றுத் தருவதாக தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கணேசும் கலந்து கொண்டார்.

# கடற்றொழிலாளர்கள் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலாளர்கள் தொடர்பிலான பிரச்சினைகள் தொடர்பில் விசேட கலந்துரையாடலொன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் நடைபெற்றது.

குருநகர், மாதகல், காக்கைதீவு, கொட்டடி, காரைநகர், நாவாந்துறை, சுழிபுரம் உட்பட பல கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இக் கலந்துரையாடலின் போது பல்வேறு தேவைகள் கோரிக்கைகளாக முன்வைக்கப்பட்டன.

பாதுகாப்பு ஆணை, தடை செய்யப்பட்ட தொழில் துறைகளுக்கான மாற்றுத் தொழில் உபகரணங்கள், கடற்கரை, வீதிகள் புனமைப்பு, வீட்டுத்திட்டங்கள், இறங்குதுறைகள், அகழ்வுப் பணிகள், இளைப்பாறல் மண்டபங்கள், வான், கட்டடங்கள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் இங்கு முன்வைக்கப்பட்டன.

இக்கோரிக்கைகள் தொடர்பில் அவதானஞ் செலுத்தியுள்ள அமைச்சர் விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் நீரியல் வளத் திணைக்கள பிரதி பணிப்பாளர் கணேசமூர்த்தி, சமாசத்தலைவர் எமிலியாம்பிள்ளை ஆகியோரும கலந்து கொண்டனர்.

# சிறுகடை உரிமையாளர்கள் சந்திப்பு



யாழ்.நகர்ப் பகுதியில் சிறுகடைகளில் தொழில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற வர்த்தகர்கள் நேற்றுமுன்தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து தங்களது தொழிற்றுறை தொடர்பில் கலந்துரையாடினர்.

இதன்போது நியாய அடிப்படையில் இத்தொழில் முயற்சியாளர்களின் தொழிற்றுறைகள் பாதுகாக்கப்பட்டு, மேம்படுத்தப்படுமென அமைச்சர் தெரிவித்தார். இச்சந்திப்பில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஆணையாளர் பிரணவநாதன், அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன், மாநகர சபை உறுப்பினர் சரபுல் அனான் உட்பட பல தொழில் முயற்சியாளர்களும் கலந்து கொண்டனர்.

# துன்னாலை குழுமோதல் கைதானவருக்கு விளக்கமறியல்

யாழ்.துன்னாலை தங்குச்சம் பட்டிப் பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கைகலப்பு சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை எதிர் வரும் 29 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் குமாரசாமி பொன்னம்பலம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

மேற்படி கைகலப்பு சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த எஸ்.நாகேந்திரன் (வயது 45) என்பவர் காது அறுபட்ட நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட நெல்லியடிப் பொலிஸார், சந்தேகத்தின் பேரில் ஒருவரை கடந்த வெள்ளிக்கிழமை இரவு கைது செய்தனர். தொடர்ந்து, மேற்படி சந்தேகநபரை, பதில் நீதவானின் வாசஸ்தலத்தில் நேற்றுமுன்தினம் மாலை ஆஜர் படுத்திய போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது,

மாடு ஒன்று காணாமற் போனமை தொடர்பிலேயே இந்தக் குழு மோதல் இடம்பெற்றதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கூட்டுறவு நிலையத்தில் திருட்டு

சு[illegible]ரமணியம் வீதியில் அமைந்துள்ள கூட்டுறவு விற்பனை [illegible]தின் கதவு நேற்றுமுன்தினம் இரவு உடைக்கப்பட்டு, [illegible]ருந்த 30 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான மேற்படி கூட்டுறவு விற்பனை நிலையத்தில் இருந்த, அரிசி, பால்மா பெட்டிகள், சோடா, சவற்க்கார வகைகள் உள்ளிட்டவையே திருடப்பட்டுள்ளன. இது தொடர்பில், கூட்டுறவு விற்பனை நிலையத்தின் முகாமையாளர் நேற்றுமுன்தினம் செய்த முறைப்பாட்டை அடுத்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அபகரித்த நகைகளை அடகுவைத்து

# வட்டிக்கு பணம் கொடுத்த போலி மருத்துவ தாதி கைது

மருத்துவதாதியாக நடித்து பெண்ணின் 15 பவுண் நகைகளை அபகரித்துச் சென்ற பெண்ணை நேற்றுமுன்தினம் மாலை கைது செய்ததாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பொலிஸார் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.திருநெல்வேலி பத்திரகாளி கோவில் பகுதியில் வசிக்கும் பெண்மணியொருவர் திருமணமாகி 5 வருடங்கள் கடந்த நிலையிலும் குழந்தைப் பேறு கிடைக்கவில்லை.

இந்நிலையில், இவர்களின் வீட்டிற்கு வந்த இளம்பெண் ஒருவர், தான் குழந்தை விருத்தி நிலையத்தில் மருத்துவத்தாதியாக பணியாற்றுவதாகவும், இது தொடர்பில் சிறப்புத் தேர்ச்சி மிக்க வைத்தியர் இருக்கின்றார். அவரிடம் உங்களுக்கு அனுமதி எடுத்துத் தருகின்றேன் எனவும் கூறியுள்ளார்.

தொடர்ந்து, கடந்த திங்கட்கிழமை குறித்த வீட்டிற்கு வந்த மேற்படி பெண், குறித்த வைத்தியர் பரமேஸ்வராச் சந்தியிலுள்ள தனியார் வைத்தியசாலைக்கு வருவார் என்று கூறி, சிகிச்சை பெறுவதற்கு வரும்படி வீட்டிலிருந்த பெண்ணை அழைத்துச் சென்றுள்ளார்.

வைத்தியசாலைக்குச் சென்றதும், மேற்படி வைத்தியரிடம் சிகிச்சை பெறும் போது நகைகள் அணியக்கூடாது எனக்கூறி, சிகிச்சைக்கு வந்த பெண் அணிந்திருந்த சங்கிலி மற்றும் காப்புக்களை வாங்கியுள்ளார்.

தொடர்ந்து, பெண்ணின் திருநெல்வேலியில் அமைந்துள்ள வீட்டிற்குச் சென்று, வீட்டில் இருந்தவர்களிடம், சிகிச்சைக்குச் சென்றவர் தாலிக் கொடியை மறந்துவிட்டுச் சென்றுவிட்டதாகவும், அதனைத் தரும்படியும் கேட்டு வாங்கிக் கொண்டு சென்றுவிட்டார். வைத்தியசாலையில் சிகிச்சைக்காக இருந்த பெண், நீண்ட நேரமாகியும் வைத்தியர் வருகை தராதமையால், வைத்தியசாலை நிர்வாகத்திடம் வைத்தியர் எப்போது வருவார் எனக் கேட்டுள்ளார்.

எனினும், அதற்கு வைத்தியசாலை நிர்வாகம் அவ்வாறானதொரு வைத்தியர் அங்கு வருவதில்லையென கூறியுள்ளார்.

இதனையடுத்து, பெண் வீட்டுக்கு திரும்பிய போதே, மருத்துவத்தாதி போல வேடமிட்ட பெண் தன்னை ஏமாற்றியமை தெரியவந்தது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட பெண், கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தனது 15 பவுண்கள் நகைகள் இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு பதிவு செய்துள்ளார். முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளைக் கொண்டு, திருநெல்வேலி ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த பெண்ணை நேற்றுமுன்தினம் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பெண் அபகரித்த நகைகளை தனியார் அடகு நிலையமொன்றில் அடகு வைத்து, அந்தப் பணத்தை வட்டிக்கு கொடுத்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்ததாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# க.பொ.த. (சா/த) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

**தமிழ்மொழியும் இலக்கியமும்**

## பகுதி I

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) ஒவ்வொரு தடவையும் நிஜம் சொல்லும் பொழுது ஒரு நட்சத்திரம் பிறக்கிறது. இங்கு நிஜம் என்பதன் பொருள்
1) மெய் 2) பொய் 3) பேசுதல் 4) குற்றம்

2) "வையகமெல்லாம் எமதென் றெழுதுமே மொய்யிலை வேல் மாறன் களிறு" இங்கு மொய் என்பதன் கருத்தாவது
1) மொய்த்தல் 2) மென்மை 3) வலிமை 4) பெரிய

3) "விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்க" இங்கு வெள்கி என்பதன் ஒத்தகருத்து
1) மயக்கம் 2) தயக்கம் 3) வெட்கம் 4) வெறுப்பு

4) அறிவற்ற செல்வரை உலகம் தூற்றும், தூற்றும் என்பதன் எதிர்க்கருத்து
1) இகழும் 2) பழிக்கும் 3) தூவுதல் 4) போற்றுதல்

5) அரசிளங்குமரி பாங்கியுடன் நந்தவனம் சென்றாள். பாங்கி என்பதன் ஆண்பாற் சொல்
1) கணவன் 2) பாங்கன் 3) தோழன் 4) தோழி

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6) சபையில் சொல்லத்தகாத சொல்லை மறைத்து வேறு வகையில் சொல்வது
1) மரூஉ 2) இடக்கரடக்கல்
3) இலக்கணப்போலி 4) ஜம்பொருள்

7) விமலன் உலாந்தாவில் அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்தான். இங்கு உலாந்தா என்பது
1) ஒல்லாந்து 2) வடசொல் 3) போர்த்துக்கேயர் 4) ஆங்கிலம்

8) நம் முன்னோர் தந்த பிரோவேப்ஸ் (Proverbs) வையத்தில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் பிரோவேப்ஸ் என்பதன் தமிழ் வடிவம்
1) பொக்கிஷம் 2) பழமொழிகள்
3) உவமைகள் 4) பழக்கவழக்கங்கள்

9) கடல் கொந்தளிப்பை உணர்த்தும் மீனவச் சமூகத்தின் கிளை மொழி
1) செக்கல் 2) அம்மாறு 3) வெள்ளிடி 4) அணியம்

10) வெளிப்படையாகக் கேட்டல் என்னும் பொருளைத் தரும் மரபுத் தொடர்
1) வாய் மூத்தல் 2) வாய் திறத்தல்
3) வாயைப் பூட்டுதல் 4) வாய் விடுதல்

**சரியான விடையைத் தெரிவு செய்க.**

11) புல்லின் இலைக்குரிய பெயர் தாள் - பனையின் இலைக்குரிய பெயர்
1) இலை 2) ஓலை 3) குலை 4) கன்று

12) முகமன் கூறிக் கிளப்பி விடுதல் என்ற பொருள் தரும் மரபுத் தொடர்.
1) வாலாட்டுதல் 2) வால் முளைத்தல்
3) வால் வீசுதல் 4) வால் காட்டுதல்

13) யானை பிளிறும் என்பது போல் பன்றி
1) கதறும் 2) உறுமும் 3) கத்தும் 4) கனைக்கும்

14) ஒன்றுபோல் இருக்கும் வேறொன்று
1) அசல் 2) போலி 3) உருவம் 4) குற்றி

15) ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது என்னும் பழமொழியின் பொருள் கொண்ட இன்னொரு பழமொழி
1) சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது.
2) கையாளாத ஆயுதம் துருப்பிடிக்கும்.
3) அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?
4) பள்ளிக்கணக்கு புள்ளிக்கு உதவாது.

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16) பெரியவர் தான் தொலைத்த பொருளைக் கண்டுபிடித்துக் கொடுத்த இளைஞனுக்கு ...................... வழங்கினார்.
1) வேதனம் 2) கூலி 3) சம்மானம் 4) இழப்பீடு

17) ஒருவர் இறந்த பின் அவரைப் பற்றிப் பாடப்படும் பாடல் ............. எனப்படும்.
1) கவிதை 2) செய்யுள் 3) ஒப்பாரி 4) கிரியை

18) ஆணைக்குழுவின் ...................... மூலம் மக்களுக்கு நல்லதொரு தீர்வு கிடைக்கும்.
1) சுற்றறிக்கை 2) செய்தி 3) அறிக்கை 4) செயற்பாடு

19) ................ அமைச்சு செயலாளர்கள் பத்துப் பேரைச் சேவையில் இருந்து நீக்க அரசு தீர்மானித்துள்ளது.
1) வினைத்திறனற்ற 2) செயற்றிறனுடைய
3) சேவை செய்யாத 4) பொறுப்பற்ற

20) கனடா நகர சபை தமிழர்களின் தைப்பொங்கல் பண்டிகையை பாரம்பரிய விழாவாகக் கொண்டாட
1) உறுதியளித்துள்ளது 2) ஏற்பாடு செய்துள்ளது
3) பொறுப்பேற்றுள்ளது 4) அங்கீகரித்துள்ளது

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

21) தரப்பட்ட சொல் வகைக்குப் பொருந்தாத ஒரு சொல் இடம்பெறும் வரிசை
1) வினைமுற்று - படித்தான், வந்தேன், நடித்தோம்
2) வினையெச்சம்- வந்த, படித்து, ஓடி
3) பெயரெச்சம் - ஆடும், பாடிய, வாசித்த
4) தொழிற்பெயர்- வாசித்தல், நோக்காடு, விளையாடுதல்.

22) பின்வருவனவற்றுள் பண்புத் தொகையாவது
1) முக்குணம் 2) முருகக் கடவுள் 3) பவளவாய் 4) கடிநாய்

23) வினைச்சொல்லின் சிறப்பிலக்கணமாவது
1) வேற்றுமை ஏற்றல் 2) செயலைக் காட்டல்
3) காலம் காட்டல் 4) பயனைக்கூறல்

24) படித்தனன் என்பதில் இடம்பெறும் சாரியை ஆவது
1) படி 2) த் 3) அன் 4) ஆன்

25) பின்வருவனவற்றுள் பயனிலை தொக்கி நிற்கும் வாக்கியமாவது
1) புண்ணியம் செய்தால் நன்மை 2) செய்வன திருந்தச் செய்
3) ஒன்று சொல்லுகிறேன் 4) கதவைத் தட்டுங்கள்

26) ஆசிரியர் கணித பாடத்தை கற்பித்தார். கற்பித்தார் என்பது,
1) செய்வினை 2) செயப்பாட்டு வினை
3) ஏவல் வினை 4) பிறவினை

27) பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினையாவது.
1) படித்தான் 2) அழுதான் 3) வாசித்தோம் 4) சாப்பிட்டது

28) இயல்பு புணர்ச்சியாவது
1) கடலலை 2) மணிக்கூடு 3) வர்த்தக வலயம் 4) பாற்குடம்

29) திருக்கை மீனின் விலை உயர்ந்தது. திருக்கை என்பது
1) உருவக அணி 2) உவமை அணி
3) சிலேடை அணி 4) தற்குறிப்பேற்றணி

30) பின்வருவனவற்றுள் கூட்டுப்பெயர் அல்லாதது
1) தந்தியடி 2) கட்டுரை 3) வானொலி 4) நீரேரி

**பின்வரும் வாக்கியங்களுள் இலக்கண வழுவற்ற வாக்கியங்களைத் தெரிவு செய்க.**

31) 1) நீதிப்பாடல்கள் எமக்கு அறிவூட்டுவனவாக உள்ளன.
2) நீதிப்பாடல்கள் எமக்கு அறிவூட்டுவதாக உள்ளன.
3) நீதிப்பாடல்கள் எமக்கு அறிவூட்டுவனவாக உள்ளது.
4) நீதிப்பாடல்கள் எமக்கு அறிவூட்டுவதாய் உள்ளன.

32) 1) நாம் நாளை சுற்றுலா செய்வேன்.
2) நாம் நாளை சுற்றுலா செல்கிறேன்.
3) நாம் நாளை சுற்றுலா சென்றோம்.
4) நாம் நாளை சுற்றுலா செல்வோம்.

**பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழைகளற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க**

33) 1) செய்யுள் - கவிதை வெளிப்பாட்டுக்கு உதவும்
2) செய்யுல் - கவிதை வெளிப்பாடுக்கு உதவும்.
3) செய்யுள் - கவிதை வெலிப்பாட்டுக்கு உதவும்.
4) செய்யுல் - கவிதை வெலிப்பாட்டுக்கு உதவும்.

34) 1) உருபுகளை இனைத்தே பயன்படுத்துகின்றோம்.
2) உறுபுகளை இனைத்தே பயன்படுத்துகின்றோம்.
3) உறுபுகளை இணைத்தே பயன்படுத்துகின்றோம்.
4) உருபுகளை இணைத்தே பயன்படுத்துகின்றோம்.

35) 1) விண்ணியலைப் பற்றி அறியலாம்
2) வின்னியலைப் பற்றி அறியலாம்.
3) வின்னியலைப் பற்ற அறியலாம்
4) விண்ணியளைப் பற்றி அறியலாம்.

**பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

அலைகடலின் துரும்பானேன் ; அடவி மீதில்
அகப்பட்ட சேயானேன் ; அனலைக் கக்கும்
உலையிட்ட மெழுகானேன் ; ஆலை வாயில்
உட்புகுந்த கரும்பானேன் ; கொம்பில்லாத
நிலையிழந்த கொடியாகி ; வனத்தில் நின்றே

நிட்டுலப் படுகின்றேன் ; அம்மா தாயே!
கொலையிலிருந்து என்னை மீட்க ஓடி வாராய்

36) அடவி மீதில் அகப்பட்ட சேயானேன். இங்கு சேய் என்பது
1) சிறுவன் 2) இளமகள் 3) குமரன் 4) மனைவி

37) தன்னை மீட்க வரும்படி அழைப்பது
1)தந்தையை 2) தலைவனை 3) தாயை 4) மகளை

38) இங்கு கூற விரும்பிய கருத்திற்கு ஒவ்வாத கருத்தாவது
1) துன்பத்தின் அவல நிலை கூறப்படல்.
2) துன்பத்தின் மிகுதியை ஒப்பீட்டு முறையில் கூறல்.
3) இளமகளின் அதீத துயர் வெளிக்காட்டல்.
4) துன்ப நிலையில் இருந்து இன்பம் காணல்.

39) ஆலைவாயில் அகப்பட்ட கரும்பு என்பதை உணர்த்தும் வேறொரு சொற்றொடர்
1) வெள்ளிடை மலை போல 2) குன்றின் மீது இட்ட ஒளி போல
3) குடத்துள் விளக்கு போல 4) கடலில் அகப்பட்ட தும்பு போல

**பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தினால் வரும் வாக்கிய வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

40) அ. அவர்கள் கூறியிருக்கும் உவமைகளைக் கண்டால் உண்மை விளங்கும்.
ஆ. அந்த நாளைய புலவர்கள் பழமைக்கு அடிமையாகாது வெற்றி பெற முயன்றார்கள்.
இ. சங்ககாலம் ஒரு புரட்சிக் காலம்.
ஈ. சங்கப் புலவர்களை நாமும் போற்றிடுவோம்.
உ. தாங்கள் நேரிற் கண்ட போர்களையும், ஊர்களையும் உவமை கூறினர்.
1) இ, ஈ, அ, ஆ, உ 2) இ, ஆ, அ, உ, ஈ
3) ஈ, அ, இ, ஆ, உ 4) இ, உ, அ, ஆ, ஈ

## பகுதி II

**01) சுருக்கமான விடை தருக**

i) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
தேனருவித் திரையெழும்பி வானின் வழி ஒழுகும்
ii) தன்வினை என்றால் என்ன?
iii) அவர்கள் முன்பு புதல்வன் ஊர்ந்து களித்து விளையாடி இருக்கின்றான். இந்த வாக்கியத்தை திருத்தமாக எழுதுக.
iv) வர்ணனையாளருக்கு இருக்க வேண்டிய பண்புகள் இரண்டு எழுதுக.
v) அயோக்கியன், அபகரி, அசூயை, அபூர்வம் ஆகிய வடமொழிச் சொற்களின் தமிழ் வடிவத்தினை எழுதுக.
vi) ஆசைகாட்டி மோசஞ் செய்து, மாட மாளிகை கூட கோபுரம் ஆகிய அருஞ் சொற்றொடர்களை வைத்து வாக்கியங்கள் எழுதுக.
vii) பெயர்ச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு ஒவ்வொன்றுக்கும் உ + ம் தருக.
viii) குறிப்பொன்றை விரித்து எழுதும்போது நீர் பெற வேண்டிய ஆற்றல் களைத் தெரிந்து எழுதுக. பரந்த விடய ஞானம், திரிபு பட்ட வகையில் எழுதல், தெளிவான சிந்தனை, தாமே மேலதிக கருத்துக்களை எழுதல்.
xi) ஆவணம், ஓம்படை என்ற ஒரு மொழிக்கு தொடர்மொழிகளை எழுதுக.
x) தம்பரைக் காணாத நாளெல்லாம் நாமிங்கு பிறவா நாளே என்று தம்பர் புராணம் பாடியுள்ளார். பொருத்தமான குறியீடுகளை இட்டு மீண்டும் எழுதுக.

**02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கங்கள் இடுக.**

அ) பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் பண்டைய காலங்களில் மக்களோடு தொடர்பினை ஏற்படுத்த உதவியவை. அச்சியந்திரங்கள் கண்டுபிடிப்பு பொதுசனத் தொடர்புச் சாதனங்களின் நோக்கம், பயன்பாடு தற்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய விளக்கக்கட்டுரை ஒன்று எழுதுக.

ஆ) ஆரம்ப கால திரைப்படங்கள், அவற்றில் அடங்கும் அம்சங்கள், தற்காலத் திரைப்படங்கள் அவற்றின் வளர்ச்சி இரண்டு வகையாக அதாவது ஆரம்பகால தற்காலத் திரைப்படம் என்ற அமைப்பில் வரலாற்றுக் கட்டுரை ஒன்று எழுதுக.

இ) நம் முன்னோர் தந்த இலக்கியங்கள், அவற்றை வாசிப்பதால் ஏற்படும் விளைவுகள், அவற்றைப் பேணி பாதுகாப்பதன் முக்கியத்துவம். அவற்றின் இன்றைய நிலை பற்றி மேடைப்பேச்சு.

ஈ) படித்து விட்டு வேலையின்றிச் சுற்றித்திரியும் இளைஞன் ஒருவன், வழியில் திடீரென தனது முன்னாள் நண்பனைச் சந்திக்கின்றான். இருவரும் நீண்டநேரம் உரையாடுகின்றனர். சுகதுக்கம் விசாரிக்கின்றனர். இருவருக்கும் இடையே மீண்டும் நெருக்கமான உறவு பிறக்கிறது என்ற கருத்தினை மையப்படுத்தி சிறுகதை எழுதுக.

**03) கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 35 - 40 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.**

மனித வாழ்க்கையைத் துன்பமயமாக்குவது பிணக்கு. நம்பிக்கையும், நல்லெண்ணமும் பயிலாத நெஞ்சில் பிணக்குத் தோன்றுகிறது. மேவிய அன்புடன் வாழும் திறம் இல்லையானாலும் பிணக்குத் தோன்றும். பிணக்கு பகைக்கு வித்திடும். பிணக்கு வாழ்க்கையில் அமைதியைச் சீர்குலைக்கும். போரிடும உலகம் தோன்றுவதே பிணக்கில் தான். பிணக்கு, வீட்டிலும் தோன்றும், சமூக அளவிலும் தோன்றும். பிணக்குகளைத் தவிர்த்து வாழ்தலே சிறப்பு. நான், எனது என்ற செருக்குகளை அகற்றினால் பிணக்குகள் தோன்றாது. ஆற்று வெள்ளத்திலே சுழி தோன்றும் இச்சுழியில் சிக்கியோர் எவரும் தப்புதல் அரிது. அதுபோல மனிதனும் சாதி, குலம் என்னும் சுழிகளிலே சிக்கிக் கொள்ளுதல் அறியாமை தான். துன்பத்தில் இருந்து விடுதலை பெறுதலுக்கு ஒரே வழி மற்றவர்களின் உரிமைகளை மதித்தல், புறங்கூறல் தவிர்த்தல், மற்றவர்களிடம் அன்பு காட்டல், கேடுகளை அகற்றல், பொய் பேசாது இருத்தல் என்பனவாம். நம்பிக்கையுடன் நல்லெண்ணத்துடன் பழகுவது, உறவுக்கு முதலிடம் கொடுப்பது, யார் மட்டும் அடக்கமாக இருப்பது ஆகிய நற்பண்புகளை மேற்கொண்டு பிணக்குகளைத் தவிர்த்து, பிணக்கு இல்லாத பெருவாழ்வு வாழ்வோம்.

**04) பின்வரும் பாடலை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.**

பூத்துக் கிடக்குது காடு - கண்டு
பூரித்துப் பரவச மானேன்
காத்துக் கிடந்ததுக் கேற்ப - இந்தக்
காடு செழித்து வளர்ந்தது பாரு.

நேற்றும் அதற்குள்ளே போனேன் - என்
நெஞ்சை இழந்து வெறி கொள்ள லானேன்
கவிவந்து என்முன்னே வீசும்.

நெஞ்சில் சுமையுடை யோரும் - வாழ்வில்
நிம்மதி யளின்றி அலைக்கழிவோரும்
கொஞ்சம் இதற்குள்ளே வாரும் - ஞானம்
குடிகொண்டால் யாவும் தானாக ஓடும்.

i) ஏன் பரவசமானதாகக் கூறப்படுகிறது?
ii) கொஞ்சம் இதற்குள்ளே வாரும் எனக் குறிப்பிடப்படுவது எதனை?
iii) உள்ளே வந்தால் யாது ஏற்படும் என கவிஞர் கூறுகிறார்?
iv) நெஞ்சு வெறி கொள்ளக் காரணம் யாது?
v) பரவசம், செழித்து என்பதன் பொருளினை எழுதுக.

**05) உமது வகுப்பு மாணவர்களால் தயாரிக்கப்பட்ட நூலின் வெளியீட்டு விழாவிற்கு பொதுமக்களைக் கலந்து கொள்ளுமாறு அறிவித்து 75 சொற்களில் துண்டுப் பிரசுரம் ஒன்று எழுதுக.**

அல்லது

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தில் முதியோருக்கான கருத்தரங்கு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதற்குக் குறித்த தினத்தில், குறித்த இடத்தில் அனைவரையும் ஒன்று கூடும்படி 75 சொற்களில் சுவரொட்டி எழுதுக.

01) சுருக்கமான விடை எழுதுக
1) "ஊருணி நீர் நிறைந்த தற்றே உலகவாம் பேரறி வாளன் திரு" இக்குறளின் பொருளினை எழுதுக.
2) பசி வந்தால் பறந்து போகும் பத்தும் எவை?
3) "மடல் பெரிது தாழை மகிழினது கந்தம" கொண்டு கூட்டி எழுதுக.
4) வாக்குண்டாம், பழமொழி நானூறு என்ற நூல்களை எழுதியோர் யாவர்?
5) முத்தமிழ் எது? முடியுடை மூவேந்தர் யாவர்?
6) கலம்பகம் என்றால் என்ன?
7) "அப்படி அடிக்க முடியுமா்டா அம்பி" யாரால் யாருக்கு கூறப்பட்டது. என்ன?

## 2015 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் மாணவர்களுக்கான பொது அறிவு

நிறுவனங்கள் பலவித நோக்கங்களைக் கொண்டு இயங்குகின்றன. அவை தமது செயற்பாட்டை வெளிப்படுத்தும் விதமான இலட்சினைகளைக் கொண்டுள்ளன.

**அரச நிறுவனங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| வீதி அபிவிருத்தி அதிகாரசபை | இலங்கை மின்சார சபை | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | சமுர்த்தி அதிகார சபை |
| மத்திய சுற்றாடல் அதிகார சபை | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை | இலங்கைத் துறைமுக அதிகார சபை | இலங்கை கட்டளைகள் நிறுவனம் |
| தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | நகர அபிவிருத்தி அதிகாரசபை | இலங்கை சுற்றுலாச் சபை | நாடாளுமன்ற செங்கோல் | ஊழியர் நம்பிக்கை நிதிய சபை |

# ஐ.நா.வின் முன்னால் தோன்றும் சாட்சிகளுக்கு பணம் வழங்கப்பட்டதா?

## குமுறுகிறார் நிமல்கா பெர்னாண்டோ

(கொழும்பு)

சாட்சியாளர்களுக்கு பணம் வழங்கப்பட்டதாக சுமத்தப்படும் என்ற குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என மனித உரிமை செயற்பாட்டாளர் நிமல்கா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழு முன்னிலையில் சாட்சியமளிக்கும் நபர்களுக்கு பணம் செலுத்தப்பட்டதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு பொய்யானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள, தமிழ் தாய்மார்களின் கண்ணீரை விலை கொடுத்து வாங்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார். காணாமற் போனவர்களின் பெற்றோரே இவ்வாறு சாட்சியமளித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சாட்சியாளர்களை இழிவு படுத்தும் வகையில் எவரும் கருத்து வெளியிடக் கூடாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். குற்றச்சாட்டுக்கள் உண்மை என்பதனை முடிந்தால் அரசாங்கம் நிரூபிக்கட்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சட்டத்தரணியான வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இவ்வாறு போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்துவது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

1989 ஆம் ஆண்டு காணாமற்போதல் சம்பவங்கள் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குரல் கொடுத்திருந்தார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தெற்கின் சிங்களத் தாய்மாருக்கு நட்ட ஈடு கிடைக்கப்பெற்றதாகவும், வடக்கின் தமிழ்த் தாய்மாருக்கு எதுவும் கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இராவணன் காலத்தில் உலோக பயன்பாடு

## ஆய்வு ஆரம்பம்

இராவணேஸ்வர மன்னரின் இரும்பு பயன்பாடு குறித்து ஆய்வு நடாத்த ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, களனி பல்கலைக் கழகத்தின் தொல்பொருள் ஆய்வு நிலையத்தின் பேராசிரியர் ராஜ் சோமதேவ தெரிவித்துள்ளார்.

பலாங்கொடை தேசிய உரிமைகளை பாதுகாக்கும் சபையின் விசேட பேச்சுவார்த்தை ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன் போது அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

அப்புத்தளை அல்துமுல்லை பிரதேசத்திலும், பலாங்கொடை பிரதேசத்திலும் 4000 வருடங்களுக்கு முன்னர் பார்லி உள்ளிட்ட விவசாய பொருட்கள் பயிரடப்பட்டமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

அத்துடன் மட்பாண்டங்கள் மற்றும் இரும்பு ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், தற்போது கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களைக்கொண்டு இந்த விடயம் தொடர்பான ஆய்வில் தற்போதுஈடுபட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆட்டோ தரிப்பிடம் பெயர்ப்பலகை மாயம்

முழங்காவில் பகுதியில் கடைத்தொகுதிகள் அடங்கிய காணிகளுக்கு அருகாமையில் பூநகரி பிரதேச சபையால் ஆட்டோ தரிப்பிடத்திற்கான இடம் ஒதுக்கப்பட்டு அங்கு பிரதேச சபையால் நாட்டப்பட்ட பெயர்ப்பலகையை கடந்த வாரம் விசமிகள் பிடுங்கி கொண்டு சென்றுள்ளதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இவ்விடயமாக முழங்காவில் ஆட்டோ சங்கத் தலைவர் சி.சந்திரன் முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இவ் விசமத்தனமான செயலில் ஈடுபட்டமைக்கான காரணத்தை அறிய பொலிஸார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (112)

# கலை இலக்கிய விழா பூநகரியில் ஏற்பாடு

பூநகரிப் பிரதேச கலாசார பேரவையால் நடாத்தப்படும் நாலாவது ஆண்டு கலை இலக்கிய விழா அடுத்தமாத முறபகுதியில் நடைபெறவுள்ளது.

கலாசார விழாவையொட்டி திறந்தபோட்டியாக பொது அறிவுப் போட்டியொன்று நடாத்துவதற்கான 20 வினாக்கள் அடங்கிய வினாப்பத்திரம் ஒன்று வெளியிடப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

விடை எழுதி எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும். முற்றிலும் சரியானவிடை எழுதியோரில் இருந்து குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தெரிவு செய்யப்படுவர். (112)

# தங்க கடத்தலின் மையமாக மாறுகிறது கொழும்பு

(கொழும்பு)

தங்கக்கடத்தலின் கேந்திர மையமாக இலங்கை இப்போது மாற்றமடைந்து வருகிறது.

அந்தவகையில் தங்கத்தை கடத்த முற்பட்ட 100 பேர் வரையில் கடந்த ஆறு மாத காலப்பகுதியில் கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையததில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுங்கத்திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த காலப்பகுதியில் கடத்த முற்பட்ட சுமார் 75 கிலோகிராம் தங்கம் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தங்கத்தின் பெறுமதி 300 மில்லியன் ரூபாய்கள் என்று கணிப்பிடப் பட்டுள்ளன.

இவை சென்னை, பெங்களூர் மறறும் மும்பை போன்ற விமான் நிலையங்களுக்கு கடத்திச் செலல முற்பட்ட வேளையில் மீட்கப்பட்டுள்ளன.

# மோசடிப் பெண் பொலிஸ் வலையில்

வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்ட பெண் ஒருவரை வெலிஅத்த பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் வரும் வேலை வாய்ப்புக்களை அவரது செயலாளர் மூலம் பெற்றுத் தருவதாகக் கோரியே இவர் மோசடி செய்துள்ளார்.

வெலிஅத்த பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

39 வயதான குறித்த சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக தங்காலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

# நல்லூரானின் தேர்திருவிழா காட்சிகள்...



# காஷ்மீர் எல்லைப்பகுதியில் பாகிஸ்தான் படையினர் தாக்குதல்

## இரு பொதுமக்கள் பலி; 3000 பேர் இடப்பெயர்வு





ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில், இந்திய இராணுவ முகாம்களை நோக்கியும், கிராமங்களை நோக்கியும், பாகிஸ்தான் படையினர், நேற்றுமுன்தினம் தாக்குதல் நடாத்தியதில், அப்பாவிகள் இருவர் கொல்லப்பட்டனர் எல்லை பாதுகாப்புப் படை வீரர் ஒருவர் உட்பட, ஆறு பேர் காயம் அடைந்தனர்.

இதையடுத்து, ஜம்மு காஷ்மீர் எல்லைப் பகுதியில் கூடுதல் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். இராணுவ அதிகாரிகளும் எல்லைப்பகுதிக்கு விரைந்துள்ளனர்.

ஜம்மு - காஷ்மீர் மாநிலம், பூஞ்ச் மாவட்டத்தில், சர்வதேச எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டை ஒட்டிய, ஆர்.எஸ்.புரா மற்றும் ஹமீர்பூர் பகுதியில் உள்ள, 24 இந்திய இராணுவ முகாம்களை நோக்கியும், அருகேயுள்ள, 13 கிராமங்களைக் குறிவைத்தும், பாகிஸ்தான் இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு, தாக்குதல் நடாத்தினர்.உடன், எல்லை பாதுகாப்புப் படையினரும், இராணுவத்தினரும் பதில் தாக்குதல் நடாத்தினர்.

நள்ளிரவில் ஆரம்பித்த சண்டை, காலை வரை நீடித்தது.சிறிய ரக பீரங்கிகள், தானியங்கி துப்பாக்கிகள் உட்பட, சில வகையான ஆயுதங்கள் மூலம், பாகிஸ்தான் படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் அப்பாவிகள் இருவர் உயிரிழந்தனர்.

வீடுகள் சேதமடைந்தன.சண்டையை அடுத்து, எல்லையை ஒட்டிய பகுதிகளில் குடியிருந்த, 3,000இற்கும் மேற்பட்டோர், பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டனர்.

இந்தத் தாக்குதலால், எல்லையில் வாழும் மக்கள் மத்தியில் பதற்றம் நிலவுகிறது.

# பாகிஸ்தான் உளவாளிக்கு உதவிய இந்திய இராணுவவீரர் கைது

உத்தரப்பிரதேசத்தில் பாகிஸ்தான் உளவாளிக்கு உதவிய இந்திய இராணுவ வீரர் ஒருவர் சிறப்புப் படை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் உளவுத்துறைக்கு சில இர்கசிய தகவல்களை அனுப்பும் பிரதிநிதியாக செயற்பட்டு வந்த ஆசிப் அலி என்பவனை கடந்த 16ஆம் திகதி சிறப்புப் படை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உத்தரப்பிரதேசத்தில் உள்ள மீரட்டில் டில்லி கேட் பகுதி அருகே உள்ள பாகிஸ்தான் உளவுத்துறைக்கு, இந்திய இராணுவ வீரர் ஒருவர் மூலமாக இராணுவ இரகசியங்களை ஆசிப் அலி பாகிஸ்தான் உளவு அமைப்பான 'ஐ.எஸ்.ஐ'க்கு அனுப்பி வந்தமை தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து ஆசிப் அலி அளித்த தகவலையடுத்து, இமாச்சலப் பிரதேசம் மாநிலத்தில் சுனிட் குமார் என்ற இராணுவ வீரரை நேற்றுமுன்தினம் சிறப்புப் படை பொலிஸார் கைது செய்து விசாரித்துள்ளனர்.

விசாரணையில் சுனிட் குமார் கூறுகையில், 2012ஆம் ஆண்டு இராணுவத்தில் சேருவதற்கு முன்னதாக அவருக்கு ஒரு வெளிநாட்டு பெண்ணின் தொடர்பு ஏற்பட்டது.

பின்னர் இராணுவ பணியில் சேர்ந்ததும் அந்தப் பெண்ணிடம் நான் பணியாற்றும் பிரிவு தொடர்பாக சில ரகசியங்களைக்கூறினேன்.

அவற்றை அந்தப் பெண் ஆசிப் அலிக்கு தெரிவித்து, அவன் மூலம் அவை பாகிஸ்தான் உளவுத்துறைக்கு சென்று சேர்ந்துள்ளன என்று தெரிவித்துள்ளார்.

மேலும், கைது செய்யப்பட்ட சுனிட் குமாரிடம் இருந்த மடிக்கணனி, ஹார்ட் டிஸ்க், 2 கைபேசிகள் மற்றும் ஒரு பென் ரைவ். ஆகியவற்றை பறிமுதல் செய்ததோடு அவற்றை ஆய்வு செய்தும் வருகின்றனர்.

# 8 தீவிரவாதிகளுக்கு சீனாவில் மரணதண்டனை

சீனாவில் தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபட்ட எட்டுப் பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

சீனாவின் க்ஸிங்ஜியாங் மாகாணத்தை சேர்ந்த எட்டு தீவிரவாதிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனை நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டதாக அந்நாட்டு அரசு ஊடகங்கள் அறிவித்துள்ளன.

சீனத் தலைநகர் பீஜிங்கில் உள்ள டியனன்மென் சதுக்கத்தின் மீது கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் கார்க்குண்டுத்தாக்குதல் நடத்த திட்டமிட்ட தீவிரவாதிகள் மற்றும் சீனாவின் பல்வேறு ரயில் நிலையங்களில் அப்பாவி மக்களை வெட்டி கொலை செய்தவர்களுக்கு நேற்றுமுன்தினம் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

# பிளந்தது பூமி



மெக்சிக்கோவின் வட மேற்கில் ஹெர்மோசிலோ பகுதியில் உள்ள பண்ணை நிலத்தில் வெடிப்பு ஏற்பட்டது. 26 அடி ஆழத்திற்கு சுமார 1 கி.மீற்றர் தூரம் வரை வெடிப்பு ஏற்பட்டு இருந்தது.

பண்ணை நிலத்தில் தொடங்கிய வெடிப்பு நெடுஞ்சாலையையும் பாதித்து கடற்கரை வரை 16 அடி அகலத்தில் இருந்தது.

இந்த வெடிப்பு காரணமாக நெடுஞ்சாலையில் வாகன போக்குவரத்து நிறுத்தப்பட்டது. பூமியில் திடீரென வெடிப்பு ஏற்பட்ட காரணம் குறித்து மண்வள நிபுணர்கள் ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

இப்பகுதியில் சமீபத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதனால் வெடிப்பு ஏற்பட்டிருக்கலாம் என கருதப்பட்ட்து.

# இடிந்து வீழ்ந்தது தங்கச் சுரங்கம்; மத்திய ஆபிரிக்காவில் 27பேர் பலி

மத்திய ஆபிரிக்காவில் உள்ள தங்கச்சுரங்கம் ஒன்று இடிந்து விழுந்ததில் 27 பேர் மண்ணில் புதைந்து பலியாகியுள்ளனர்.

மத்திய ஆபிரிக்க குடியரசு நாட்டில் உள்ள பம்பாரி (Bambari) நகரில் மலைகள் சூழ்ந்த வனப்பகுதியான டேசிமாவில் (Dassima) தங்கச்சுரங்கம் இடிந்து வீழ்ந்துள்ளது.


கனடாவைச் சேர்ந்த ஆக்ஸ்மின் (Axmin) என்ற நபருக்கு சொந்தமான இந்த சுரங்கம், திடீரென இடிந்து விழுந்ததில் 27 பேர் மண்ணில் புதைந்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த மீட்புப் படையினர், நடாத்திய தீவிர தேடுதல் வேட்டையில் 25 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். மேலும் மாயமான 2 பேரைத் தேடி வருகின்றனர்.

இதுகுறித்து மத்திய ஆபிரிக்க நாட்டின் சுரங்க அமைச்சக அதிகாரி கூறுகையில், தங்கச்சுரங்க நிறுவனங்கள் சரியாக சட்டதிட்டங்களைக் கடைபிடிப்பதில்லை என்றும் அதனால் மழை ஏற்படும் போது சுரங்கம் இடிந்து விழுந்து விடுகிறது எனவும் தெரிவித்துள்ளனர்.

உலகச் செய்திகள்

# தீவிரவாதிகளிடம் வீழ்ந்தது திரிபோலி விமான நிலையம்



லிபிய தலைநகர் திரிபோலியில் உள்ள சர்வதேச விமான நிலையத்தை கைப்பற்றியுள்ளதாக மிஸ்ரதா பகுதி தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கடாபி கொல்லப்பட்ட பிறகு தலைநகர் திரிபோலியில் உள்ள சர்வதேச விமான நிலையத்தை கைப்பற்ற இஸ்லாமிய தீவிரவாதிகள் போரிட்டனர்.

இதனால் அந்நாட்டு தேசிய படைக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையில் கடுமையான சண்டை நடந்து வருகிறது.

இதனையடுத்து, கடந்த ஜூலை 13ஆம் திகதி திரிபோலி சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டு, மட்டிகா விமான நிலையத்தின் மூலம் விமான போக்குவரத்து தொடர்ந்து வந்தது.

இந்நிலையில், திரிபோலி சர்வதேச விமான நிலையத்தைக கைப்பற்றியுள்ளதாக மிஸ்ரதா நகரை சேர்ந்த தீவிரவாதிகள் நேற்று முன்தினம் அறிவித்துள்ளனர்.

விமான நிலைய கட்டடம் மற்றும் விமானங்களின் மீது இந்தக் குழுவினர் தங்களது கொடியுடன் ஏறி நிற்கும் காட்சிகளை உள்ளூர் ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

# ஜெயலலிதாவின் ஊழல்களை அம்பலப்படுத்த வலைத்தளம்



ஜெயலலிதாவின் ஊழல்களை மக்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்த தி.மு.க சார்பில் வலைத்தளம் தொடங்கப்படும் என ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கரூர் மாவட்டத்தில் நடைபெற்ற தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தி.மு.க பொருளாளர் ஸ்டாலின் பேசும் போது இத்தகவலை வெளி கன்னியாகுமரி, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய மாவட் ...டர்ந்து, ஐந்தாவது மாவட்டமாக கரூர் மாவட்டத்தில் ...பு பணி நடைபெறுகிறது.

மாதந்தோறும் மொத்தம் 10 மாவட்டங்களில் ஆய்வுப்பணி நடாத்த, தலைவர் கருணாநிதி உத்தரவிட்டதையடுத்து,நடாத்தப்பட்ட ஆய்வில் கரூர் மாவட்ட நிர்வாகிகள் தாங்கள் ஆளுங்கட்சியால் சந்தித்த பல்வேறு பிரச்சினைகள் பற்றி பகிர்ந்துகொண்டுள்ளனர்,

இதன்மூலம் கரூரில் ஆளுங்கட்சியின் அராஜகம் அதிகரித்துள்ளது என்பது நன்கு புலப்படுகிறது என்றும் இவற்றை எல்லாம் வலைத்தளம் ஒன்று தொடங்கி உடனுக்குடன் தி.மு.க வினர் தெரிவிப்போம் எனவும் தெரிவித்துள்ளார்.

# சர்ச்சைக்குள்ளான சவால்

பிரித்தானியாவில் இளைஞர் ஒரு...ர் தனது நாயின் தலையை ஐஸ் நீரில் மூழ்கவைத்து ஐஸ் பக்கெட் சவால் செய்ய வைத்துள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவை சேர்ந்த இளைஞர் ஒருவர் தனது நாயை குளிர்ந்த தண்ணீரில் தலையை மூழ்க வைத்து ஐஸ் பக்கெட் சவால் செய்ய வைத்துள்ளார்.

இதனால் தற்போது இவர் மீது விலங்குகள் தடுப்பு மையம் நடவடிக்கை எடுக்க உள்ளது.

# வெளிநாட்டிலிருந்து கொண்டுவந்த நகைகள் குறித்து விசாரணை

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளிலிருந்து யாழ்பபாணம் வந்து நகைகளை பறிகொடுத்தவர்கள் எவ்வளவு நகைகளை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வந்தார்கள் என்பது தொடர்பில் அந்தந்த நாடுகளிலுள்ள தூதரகங்கள் மூலம் தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொகான் டயஸ் நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்தவர்களின் நகைகள் திருடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் அண்மைக் காலங்களில் அதிகமாக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

திருடப்பட்ட நகைகள் 35, 40 பவுண்களுக்கு அதிகமாகவே இருப்பதாக முறைப்பாடுகளில் நகை உரிமையாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளன. இருந்தும், வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் நகைகள் கொண்டு வருவதற்கு கட்டுப்பாட்டு அளவுகள இருக்கின்றன. அவற்றை அந்தந்த நாடுகளில் உள்ள தூதரகங்கள் கண்காணிக்கும்.

ஆகவே, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுக்கும் பொருட்டு, அந்தந்த நாடுகளிலுள்ள தூதரகங்களுடன் தொடர்பு கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வந்தவர்கள் எவ்வளவு நகைகளைக் கொண்டு வந்தனர் என்பது தொடர்பில் தகவல்கள் திரட்டப்படவுள்ளன.

முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்ட நகைகளை விட குறைவான அளவில் நகைகள் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ரொகான் டயஸ் மேலும் தெரிவித்தார்.

## 13 ஆவது...

இலங்கை அரசுக்கும் சில வாதங்கள் இருக்கின்றன. அவர்கள் உட்கட்டுமான அபிவிருத்திகளைச் செய்திருக்கிறார்கள். எனவே அவர்கள் ஒன்றுமே செய்யவில்லை என்று கூறமுடியாது.

ஆனாலும் சிலவற்றை செய்துவிட்டார்கள் என்பதற்காக மக்களுக்கு தேவையான அனைத்தையும் செய்துவிட்டார்கள் என்றும் சொல்லமுடியாது. எனவே தீர்வு விடயத்தில் தமிழ்க் கட்சிகளும், அங்குள்ள வேறு மாற்றுக் கட்சிகளும் முன்வரவேண்டும். இதுபோல இலங்கை அரசும் முன்வரவேண்டும். இப்படியான சந்தர்ப்பத்தில் பேச்சு நடத்தினால் இலங்கைப் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம். வெளிநாட்டு விவகாரங்களில் மத்திய அரசே முடிவுகளை எடுக்கும். தமிழக அரச தலைவர்களின் ஆலோசனை பெறவேண்டும் என்ற அவசியம் கிடையாது எனத் தெரிவித்துள்ளார்.

## இணைய...

தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தும் இந்திய அரசாங்கத்தின் திட்டத்தின் ஒரு கட்டமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுக்கு அழைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜை சந்தித்த பின்னர், வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சயீட் அக்பர்தீன் செய்தியாளர்களிடம் இந்தக் கருத்தை வெளியிட்டிருந்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்தித்ததன் பின்னர், இந்திய அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டிருந்த அறிக்கை ஒன்றிலும் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதன்படி எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஜே.வி.பி. மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி போன்ற கட்சிகளும் இந்தியாவுக்கு அழைக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## அமெரிக்க...

விடுக்கப்பட்டிருப்பதாகவும் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அவர் குறிப்பிட்டார்.

கார்டினர் ஹாரிஷ் என்ற ஊடகவியலாளருக்கே இலங்கைக்கான விசா வழங்குவது ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஊடகவியலாளருக்கு தற்போது விசா. வழங்குவதற்காக உரிய சந்தர்ப்பம் இல்லை என- சுட்டிக்காட்டியுள்ள வெளிவிவகார அமைச்சு, அவரது விசாவுக்கான விண்ணப்பம் நிராகரிக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது.

புதுடில்லியிலுள்ள இலங்கை தூதரகத்தினூடாக அமெரிக்க ஊடகவியலாளரான கார்டினர் ஹாரிஷ் விசாவிற்கு விண்ணப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மோசமானவர்கள்...

அடோல்ப் ஹிட்லர் இடம்பெற்றுள்ளார். ஹிட்லர், இலட்சக் கணக்கான யூதர்களைக் கொன்று குவித்தவர்.

அதேபோல சர்வாதிகாரி போல்பொட் தற்போது 3 ஆவது இடத்தில் உள்ளார். இடி அமீன் 4 ஆவது இடத்தில் இருக்கிறார்.

அல் கொய்தா நிறுவனர் ஒசாமா பின்லேடன் 5 ஆவது இடத்திலும், சீன மா சே துங் 6 ஆவது இடத்திலும் உள்ளனர். வட கொரியாவின் கிம் ஜோங் இல் 7 ஆவது இடத்தில் இருக்கிறார். ஹெய்ன்ரிச் ஹிம்ளர் 8 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். அமெரிக்காவால் பிடிக்கப்பட்டு தூக்கிலிட்டுக் கொல்லப்பட்ட ஈராக் தலைவர் சதாம் உசேன் 9 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். 10 ஆவது இடத்தில் இத்தாலி சர்வாதிகாரி பெனிட்டோ முசோலினி இருக்கிறார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 13 ஆவது இடத்தில் இருக்கின்றார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளருமான கோத்தாபய ராஜபக்ஷவுக்கு இந்தப் பட்டியலில் 25 ஆவது இடம் கிடைத்துள்ளது.

சோனியா காந்தியையும் இந்தப் பட்டியலில் சேர்த்துள்ளது ஆச்சரியம் தருகிறது. அவர் 29 ஆவது இடத்தில் இருக்கிறார்.

தமிழகத்தின் முன்னாள் முதல்வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான கலைஞர் கருணாநிதி இந்தப் பெயர்ப் பட்டியலில் 31 ஆவது இடத்தில் இருக்கின்றார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ இந்தப் பட்டியலில் 48 ஆவது இடத்தில் இருக்கின்றார்.

## புலோப்பளையில் கைக்குண்டு மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, புலோப்பளைப் பகுதியில் தனியார் காணியிலுள்ள கிணற்றிலிருந்து கைக்குண்டொன்று நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளதாக பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

காணியின் உரிமையாளர், கிணற்றைத் துப்புரவு செய்யும் போது கிணற்றில் கைக்குண்டு இருப்பது கண்ணுற்று பளைப் பொலிஸ் நிலையத்திற்கு இது தொடர்பாக தெரியப்படுத்தியுள்ளார். இராணுவத்தினரின் குண்டு செயலிழக்கும் பிரிவினரால் கைக்குண்டு மீட்கப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (18)

## மணவாளக் கோலவிழா

(யாழ்ப்பாணம்)

கெற்பேலி மேற்கு வல்லியப்பன் சிவன் ஆலயத்தில் பரிவார மூர்த்தியான விநாயகப் பெருமானுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை (01.09.2014) காலை 10.00 மணிக்கு அஷ்டோத்திர சங்காபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து 12.00 மணிக்கு விசேட பூசை வழிபாட்டுடன் மகேஸ்வர பூசையும் நடைபெறவுள்ளது. (66)

## வறிய...

ஒன்று யாழ். நகரப்பகுதியில் ஒட்டப்பட்டுள்ளது.

யாழ். பிரதான வீதி மற்றும் முனியப்பர் ஆலயத்திற்கு அருகாமையில் குறித்த துண்டுப் பிரசுரம் ஒட்டப்பட்டுள்ளது.

இந்தத் துண்டுப்பிரசுரத்தில் வறிய மாணவர்களின் பெற்றோர்கள் என உரிமை கோரப்பட்டுள்ளது. (25)

## யாழிலிருந்து...

சந்தேகநபர்களை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த மாரவில பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழரசுக்...

இருந்து தமிழரசுக் கட்சியைப் பிரிப்பதற்கு தனது வியூகத்தை வகுத்து வருகின்றது எனவும் பா.அரியநேந்திரன் கூறியுள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# பேருந்துகளுக்கிடையே சிக்கிய 'ஸ்கூட்டி'

யாழ். மின்சார நிலைய வீதியில் இரண்டு தனியார் பேருந்துகளுக்கிடையில் சிக்கியது ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிள்.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தெய்வா தீனமாக தப்பிக் கொண்டனர். நேற்றுக் காலை யாழ்.மின்சார நிலைய வீதியில் தரித்து நின்ற தனியார் பேருந்துக்கு அதே வீதியால் பயணிகளை ஏற்றுவதற்கு வந்த தனியார் பேருந்து தரித்து நின்ற தனியார் பேருந்தை முந்திச் செல்வதற்கு முற்படும் போது இரண்டு பேருந்துகளுக்கும் இடையில் குறித்த மோட்டார் சைக்கிள் சிக்கி பேருந்து சில்லுக்குள் விழுந்தது. இதனால் மோட்டார் சைக்கிள் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (66)

# போதைப்பொருள் பாவனை இலங்கையில் அதிகரிப்பு

### தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை எச்சரிக்கை

இலங்கையில் போதைப் பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கை சுமார் 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான ஐ.நா.வின் இரண்டு பிரகடனங்களில் கைச்சாத்திட்டுள்ள இலங்கை, அதன்படி தொடர்ந்து ஐ.நா.வுடன் இணைந்து செயற்பட்டு வருவதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தலைமை இயக்குநர் கே.கமகே தெரிவித்தார்.

இதன்படி, இலங்கைக்குள் வருகின்ற வர்த்தக சரக்கு கொள்கலன்களில் தேடுதல் நடத்தும் சிறப்பு வேலைத்திட்டமொன்றை இலங்கை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே, இந்திய- இலங்கை பொலிஸாரின் போதைப் பொருள் ஒழிப்பு அதிகாரிகளிடையே அண்மையில் புதிய இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகத்தின் இயக்குநர் எஸ்.எஸ்.பி. கமல் சில்வா ஆகிய அதிகாரிகள், இந்திய போதைப் பொருள் ஒழிப்புப் பணியகத்தின் தலைவர்களையும், தென்னிந்தியப் பிராந்தியத் தலைவர்களையும் சந்தித்து அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

போதைப் பொருள் கடத்தல்கள் தொடர்பான புலனாய்வுத் தகவல்களை உடனடியாகப் பரிமாறிக் கொள்வது, கடல் மார்க்கமாக போதைப் பொருட்கள் கடத்தப்படும்போது அது தொடர்பில் இருநாட்டு அதிகாரிகளிடையே ஒத்துழைப்புகளை பரிமாறிக்கொள்வது, கடத்தல்காரர்கள் நாடு விட்டு நாடுதாவும் போது அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுப்பது ஆகிய மூன்று விடயங்கள் தொடர்பில் இருநாட்டு அதிகாரிகளும் உடன்பாடு கண்டுள்ளனர்.

குறிப்பாக கேரளா, கர்நாடகம் மற்றும் தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்திய பிராந்தியங்கள் ஊடாக இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தப்படும்போது இருநாட்டு அதிகாரிகளும் புலனாய்வுத் தகவல்களை பரிமாறிக் கொண்டு, அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பிலேயே இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக இலங்கை பொலிஸ் பேச்சாளர் எஸ்.எஸ்.பி.அஜித் ரோகண பி.பி.சி.யிடம் கூறினார்.

கடல் மார்க்கமாக போதைப் பொருள் கடத்தப்படும்போது தென்னிந்திய மாநிலங்கள் ஊடாகவே இலங்கைக்கு போதைப்பொருள் கொண்டு வரப்படுவதாகக் கூறிய பொலிஸ் பேச்சாளர், இலங்கைக்கு கடத்தப்படும் போதைப்பொருட்களில் அதிகமானவை பாகிஸ்தானிலிருந்தே வருவதாகவும் கூறினார்.

இந்தியாவுடனான புதிய உடன்பாடுகளின் பலனாக, நேற்று முன்தினம் இரவு பாகிஸ்தானைச் சேர்ந்த போதைப் பொருள் கடத்தல்காரரை விமான நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

## அறிவிக்கப்படாத...

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

எதிர்க்கட்சிகள் ஜனாதிபதியையும் அவரது குடும்பத்தினரையும் விமர்சிக்கின்றனர். அவற்றை உள்ளூர் ஊடகங்கள் ஒளி, ஒலி பரப்புவதற்கு அனுமதிக்கப்படுகின்றன.

இலங்கையில் ஊடகங்கள் அறிவிக்கப்படாத தணிக்கை எதற்கும் உட்படுத்தப்படவில்லை என்பதற்கு இது சிறந்த உதாரணமாகும். அரசாங்கம் அரச ஊடகங்களைப் பயன்படுத்தியே தனது கருத்துக்களை முழுமையாக வெளியிட முடிகிறது.

ஆனால் எதிர்க் கட்சிகளின் கருத்துக்களை வெளியிடப் பல தனியார் ஊடகங்கள் தயாராகவுள்ளன. ஊடக தணிக்கை என்ற ஒன்று இல்லாத போதிலும் எதிர்க்கட்சிகள் வழமை போன்று இந்தக் குற்றச்சாட்டை முன்வைக்கின்றன.

பலஸ்தீனத்திற்கு நிதியுதவியை ஜனாதிபதி வழங்க முன்வந்ததில் தவறு எதுவுமில்லை, நட்புறவு நாடொன்றுக்கு தேவை எழும்போது உதவுவதில் தவறில்லை, இலங்கை அவ்வளவு வறுமையான நாடும் இல்லை அதனால் இலங்கை உதவுகிறது.

சீனா, ஜப்பான் தலைவர்கள் இலங்கைக்கு விரைவில் விஜயம் மேற்கொள்ளவுள்ளனர். இது இந்த இரு நாடுகளும் இலங்கை மீதும் அதன் எதிர்காலம் குறித்தும் வைத்திருக்கும் நம்பிக்கையை காட்டுகிறது. இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஏற்பார் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது என்றார்.

# கடலோரக் கண்காணிப்பு கப்பல்களை இலங்கைக்கு வழங்கவுள்ள ஜப்பான்

இலங்கை அதன் கடலோர கண்காணிப்பு நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்கு உதவுமுகமாக அதற்கு கண்காணிப்பு கப்பல்களை வழங்குவது குறித்து ஜப்பான் ஆராய்ந்து வருவதாக அந்த நாட்டு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஜப்பானியப் பிரதமர் சின்சோ அபே செப்ரெம்பர் மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும்போது இது குறித்து இலங்கை ஜனாதிபதிக்கு தெரியப்படுத்துவார் என அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஜப்பானிலிருந்து மத்திய கிழக்கிற்குச் செல்லும் எண்ணெய்க் கப்பல்கள் பயணிக்கும் இந்து சமுத்திர கடற்பாதையின் பாதுகாப்பை பலப்படுத்துவதும் குறிப்பிட்ட கப்பல்களை வழங்குவதன் நோக்கம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் விஜயத்தின் பின்னரே எத்தனை கப்பல்களை வழங்குவது என்பது குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ள ஜப்பானிய அதிகாரிகள் புதிதாக கட்டப்பட்ட கப்பல்களை வழங்குவதா அல்லது பயன்படுத்தப்பட்ட கப்பல்களை வழங்குவதா என்பது குறித்து இரு நாட்டு அதிகாரிகளும் கலந்தாலோசித்து முடிவெடுப்பார்கள் எனவும் தெரிவித்துள்ளனர்.

## தனது ஒரு வயது மகளை அடித்துக் கொன்ற தந்தை

(கொழும்பு)

ஒரு வயதும் ஒரு மாதமுமேயான மகளை கல்லால் அடித்துக் கொலை செய்த குற்றச்சாட்டில் அக்குழந்தையின் தந்தையை பொலிஸார் கைது செய்த சம்பவமொன்று களுத்துறை பிரதேசத்தில்இடம்பெற்றுள்ளது.

கல்லால் அடித்ததில் காயமடைந்த குழந்தை, நாகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தையின் தந்தையும் தாயும் பிரிந்து வாழ்கின்ற நிலையில், தந்தையிடம் குழந்தையைக் காண்பிப்பதற்காக நேற்று அழைத்துச் சென்றபோதே, கல்லால் அடித்து குழந்தையை அவர் கொலை செய்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

## இலங்கை தமிழர்கள் வாழ்வில் கனிந்துவரும் மகிழ்ச்சி மலரும் நாள்

### தமிழக பா.ஜ.தலைவர் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தன் மூலம் தமிழர்கள் வாழ்வில் மகிழ்ச்சி மலரும் நாள் கனிந்து வருகிறது என தமிழக பா.ஜனதா தலைவர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண பா.ஜனதா அரசு மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது. அவர்களுக்கு முழு அரசியல் அதிகாரம் கிடைக்க எந்தெந்த வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் வர வேற்போம்.

அந்த நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியுறவுத்துறை செயலர், வெளியுறவுத்துறை அமைச்சர் மற்றும் பிரதமர் நரேந்திரமோடியை சந்தித்துப் பேசியுள்ளனர்.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆட்சி அதிகாரத்துடன் கூடிய மறுவாழ்வுத் திட்டங்கள் மீட் டெடுக்கப்படும் என்று எமது வெளியுறவுத்துறை செயலர் கூறி இருக்கிறார். இதை தான் சுஷ்மா சுவராஜும் கூறினார்.

தற்போது இலங்கை எம்.பி.க்கள் மோடியை சந் தித்தன் மூலம் தமிழர்கள் வாழ்வில் மகிழ்ச்சி மலரும் நாள் கனிந்து வருகிறது. விரைவில் தமிழர்கள் சுயகௌரவத்துடன் தலை நிமிர்ந்து வாழ்வார்கள். அதற்கான எல்லா முயற்சிகளையும் மோடி அரசு மேற்கொண்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## இலங்கை அகதிகளை திருப்பி அனுப்ப முடிவு எடுக்கவில்லை இந்தியா

(கொழும்பு)

தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைத் தாயகத்துக்குத் திருப்பி அனுப்புவது குறித்து, இந்திய மத்திய அரசாங்கம் எந்த முடிவையும் எடுக்கவில்லையென இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சையட் அக்பருதீன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை புதுடில்லியில் இது குறித்து செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைத் தாயகத்துக்குத் திருப்பி அனுப்புவது குறித்து, இந்திய மத்திய அரசாங்கம் எந்த முடிவையும் எடுக்கவில்லை. எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளுடனான பேச்சுக்களில் இதுகுறித்தும் விவாதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் பலரும் தாயகம் திரும்பி, மீளக் குடியேற விருப்பம் கொண்டுள்ளதாகவும், ஆனால், அவர்கள் வடக்கு மாகாணத்தில் காணி தொடரபான பிரச்சினைகள் உள்ளிட்ட சிக்கல்களால் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## ஹெரோயின் கடத்தலின் முக்கிய சூத்திரதாரி கைது

இலங்கையில் அண்மையில் கைப்பற்றப்பட்ட மாபெரும் தொகை ஹெரோயின் போதைப் பொருளை பாகிஸ்தானிலிருந்து கடத்தியதாகக் கூறப்படும் அந் நாட்டுப் பிரஜை, நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தினூடாக நேற்று முன்தினம் நாட்டுக்குள் பிரவேசித்த இந்த பிரதான சந்தேகநபர், சீதுவை பிரதேச ஹோட்டலொன்றில் தங்கியிருந்தவாறு போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போதே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.






இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஆகஸ்ட் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.